விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 138 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 23 செவ்வாய்க்கிழமை (06.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



NORTHERN UNI
SLIIT உயர்கல்வி நிறுவனத்தின்
BSc (Hons) in IT
&
BBA (Hons)
இளமாணி பட்டப்படிப்புகளுக்கான
அனுமதிகள் ஆரம்பம் - 2025
SLIIT NORTHERN UNI
021 7534 807
(C-2901)


# உள்ளூராட்சி தேர்தல் இன்று

- காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்குப் பதிவு
- நாடு முழுவதும் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

339 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் இன்று 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. தேர்தலை முன்னிட்டு நாடு முழுவதும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வங்கி
## 11 மணி வரை மாத்திரமே திறந்திருக்கும்

(கொழும்பு)

அனைத்து இலங்கை வங்கிகளும் இன்று காலை 11 மணி வரை மட்டுமே திறந்திருக்கும் என இலங்கை வங்கி ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## சீரற்ற காலநிலை
## யாழ்ப்பாணத்தில் 26 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் சீரற்ற காலநிலை காரணமாக நேற்று 8 குடும்பங்களைச் சேர்ந்த 26 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 6 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ

15ஆம் பக்கம் பார்க்க

## தேர்தலை முன்னிட்டு நாடு முழுவதும்
## பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு நாடு முழுவதும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. முப்படையினரும் தேர்தலுக்காகப் பாதுகாப்புப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை தேர்தலுக்காக சுமார் 65 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தேவையேற்படின் தேர்தல் நடவடிக்கைகளுக்காக இராணுவத்தினரை இணைத்துக் கொள்ள எதிர்பார்ப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க மனதுங்க தெரிவித்தார்.

15ஆம் பக்கம் பார்க்க

## வாக்குச்சீட்டில் புள்ளடி மட்டுமே இடப்பட வேண்டும்

### தேர்தல்கள் ஆணைக்குழு வாக்காளர்களுக்கு அறுவுறுத்து

(கொழும்பு)

வாக்குச்சீட்டில் எழுதவோ, கீறவோ கூடாது புள்ளடி மட்டுமே இடப்பட வேண்டுமெனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க வாக்காளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இன்று நடைபெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்புக்கான சகல ஏற்பாடு

15ஆம் பக்கம் பார்க்க

## நந்திக்கடல் களப்பில்
## இளம் குடும்பஸ்தர் நேற்று சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாத்தளன் நந்திக்கடல் களப்பில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணையைச் சேர்ந்த ராஜசீலன் ராஜ்குமார் (வயது-27) என்ற ஆறு மாதப் பெண் குழந்தையின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்

15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை - வியட்நாம் இடையே 4 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

(ஹனோய்)



இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையில் பல்வேறு துறைகள் சார்ந்த 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், ஒரு இணக்கப்பாட்டு ஒப்பந்தமும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் வியட்நாம் ஜனாதிபதி லுவோங்குவாங்முன்னிலையில்கைச்சாத்திடப்பட்டன.

வியட்நாம் ஜனாதிபதி மாளிகையில் நேற்று இரு நாடுகளுக்கும் இடையிலான இரு

15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்துக



### ஐரோப்பிய பிரதிநிதியிடம் சஜித்

(கொழும்பு)

இலங்கையின் ஆடைகள் உட்பட ஏற்றுமதிப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை

02ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் கடமைக்கு சென்ற பெண் மரணம்

(கண்டி)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் கடமைகளுக்காக கண்டி கண்ணொருவ கனிஷ்ட வித்தி

15ஆம் பக்கம் பார்க்க

## முகம், கை, கால் வீக்கமடைந்த
## 15 வயது மாணவன் யாழ்.போதனாவில் மரணம்

### உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

முகம், கை, கால் ஆகியவை வீக்கம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 15 வயது பாடசாலை மாணவன் ஒருவர் நேற்று

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்றுகை மற்றும் கட்புலக் கலைகள் பீடம்**
**சங்கீதத்தில் சிறப்பு நுண்கலைமாணி**
**நடனத்தில் சிறப்பு நுண்கலைமாணி**
**சித்திரமும் வடிவமைப்பிலும் சிறப்பு நுண்கலைமாணி**
**கற்கைநெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான உளச்சார்புப் பரீட்சை**
**கல்வியாண்டு 2024/2025**
**மொழிமூலம் : தமிழ்**

மேற்படி நான்கு வருட பட்டப் படிப்புக் கற்கைநெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் 2024/2025 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான குறைந்தபட்ச தகைமையை பெற்றுக் கொண்டுள்ள தகுதியான விண்ணப்ப தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 06.05.2025 தொடக்கம் 19.05.2025 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுமதிக்கான தகைமைகள்**

கர்நாடகசங்கீதத்தில், நடனத்தில், சித்திரமும் வடிவமைப்பிலும் சிறப்பு நுண்கலைமாணி கற்கைநெறிகளில் யாதேனுமொன்றைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதுடன் தெரிவு செய்யவிரும்பும் பாடநெறிக்குரிய பாடத்தில் அதாவது கர்நாடகசங்கீதம் அல்லது நடனம் (பரதம்) அல்லது சித்திரக்கலையில் ஆகக் குறைந்தது திறமைச்சித்தியும் (C), மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதாரணதரச் சித்தியும் (S) பெற்றிருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**மதிப்பீடு செய்யும் முறை**

கர்நாடகசங்கீதம் / நடனம் (பரதம்) - ஆற்றுகைப் பரீட்சை
சித்திரமும் வடிவமைப்பும் - செய்முறை மற்றும் எழுத்துப்பரீட்சை

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத் தளம் ஊடாக தத்தமது விண்ணப்பங்களை **நிகழ்நிலையாக (online)** 19.05.2025 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ/த) 2024 பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டினையும் விண்ணப்பத்துடன் இணைத்துக்கொள்ளுதல் அவசியமானது.

விண்ணப்பித்த பிரதிகளை பதிவிறக்கம் செய்து அதில் கையெழுத்திட்டு க.பொ.த உயர்தர பெறுபேற்று பத்திரப் பிரதி மற்றும் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினையும் விண்ணப்பத்துடன் இணைத்து சிரேஷ்ட உதவிப்பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இராமநாதன்வீதி, திருநெல்வேலி எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"சங்கீதம்/நடனம்/ சித்திரமும் வடிவமைப்பும் 2024/2025"** எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் 21.05.2025 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு சமர்ப்பித்தல் வேண்டும்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அவர்களினால் வழங்கப்பட்ட **மின்னஞ்சல் (e-mail) முகவரிக்கு மட்டுமே அனுப்பி வைக்கப்படும்.** பரீட்சை தொடர்பான அனைத்துத் தகவல்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக **www.jfn.ac.lk இணையத்தளத்தின் மூலம் அறிவிக்கப்படும்.**

**பணம் செலுத்தும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்கிலக்கத்திற்குச் சேரக் கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தைச் செலுத்தி இருத்தல் வேண்டும்.

| கட்டணம் மற்றும் வங்கிக் கணக்கிலக்க விபரம் | | | |
|---|---|---|---|
| இல | கற்கைநெறி | மக்கள் வங்கிக் கணக்கிலக்கம் | விண்ணப்பக் கட்டணம் (Rs.) |
| 1 | கர்நாடக சங்கீதம் | 040002400001622 | 1000.00 |
| 2 | நடனம்- பரதம் | 040002400001630 | 1000.00 |
| 3 | சித்திரமும் வடிவமைப்பும் | 040002400001648 | 2600.00 |

மேற்குறிப்பிட்டவாறு விண்ணப்பதாரிகள் தங்கள் பாடங்களிற்கு ஏற்றவாறு பொருத்தமான குறிப்பிலக்கத்தை வங்கிப் பற்றுச் சீட்டில் குறிப்பிடவும். இக் கட்டணத்தினை **இணையவழி மூலம்** மேற்குறிப்பிட்ட கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்ய **முடியாது.**

அனுமதிக்குரிய ஆகக்குறைந்த தகைமையை கொண்டிராதவையும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு இணைக்கப்படாதவையும், க.பொ.த (உயர்தரம்) 2024 பெறுபேற்று பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாதவையும், விண்ணப்ப முடிவுத்திகதிக்குள் கிடைக்கப்பெறாதவையுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி எண் 021 222 6714 அல்லது மின்னஞ்சல் முகவரி: admissions@univ.jfn.ac.lk மூலம் தொடர்பு கொள்ள முடியும்.

**பதிவாளர்**

(C-2982)


## உள்ளூராட்சி...

வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளவர்கள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழு தனக்கான பொறுப்பை நிறைவேற்றியுள்ளது. இனி உங்களின் பொறுப்பை நிறைவேற்றுங்கள் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், சுதந்திரமானதும் நீதியானதுமான வகையில் தேர்தலை நடத்த சட்டத்தின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படும். உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படும். வாக்களித்ததன் பின்னர் வீடுகளுக்குச் செல்லுங்கள்.

நாட்டின் சட்டம் மற்றும் பொது ஒழுங்கை நாட்டு மக்கள் அனைவரும் முறையாக கடைப்பிடிக்க வேண்டும். வாக்கெடுப்பு நிலையத்தில் ஏதேனும் அசம்பாவிதம் நேர்ந்தால் முழு வாக்கெடுப்பு நடவடிக்கைகளுக்கும் பாதிப்பு ஏற்படும். ஆகவே, அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

அரச மற்றும் தனியார் துறை சேவையாளர்கள் வாக்களிக்கச் செல்வதற்கு இயலுமான வகையில் விடுமுறை வழங்க வேண்டும் என்பதை குறிப்பிட்டு விசேட சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தோம். ஒருசில தனியார் துறையினர் தமது சேவையாளர்கள் வாக்களிக்கச் செல்வதற்கு விடுமுறை வழங்கவில்லை என்று ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆணைக் குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய செயற்படுமாறு தனியார் துறை சேவை வழங்குநர்களிடம் கேட்டுக்கொள்கிறோம் என்றார். (ம-4,7)

## இலங்கை...

ஏற்படுத்தித் தருமாறு ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதியிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை முன்வைத்துள்ளார்.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் தலைமையிலான இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இராஜதந்திரக் குழுவினருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று திங்கட்கிழமை (5) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ, ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியப் பிராந்தியத் தலைவர் சார்ள்ஸ் வைட்லே, ஐரோப்பிய ஒன்றியக் குழுவின் துணைத் தலைவர் லார்ஸ் பிரெடெல், ஐரோப்பிய ஆணையத்தின் கொள்கை அதிகாரி கைடோ டொலாரா, ஐரோப்பிய வெளி நடவடிக்கை சேவையின் இலங்கைக்கான பிரதிநிதி கலிஜா அகிசேவா, ஐரோப்பிய ஆணையத்தின் கொள்கை அதிகாரி பார்டோஸ் விளாடிஸ்லாவ் ஒட்டார்செல் மற்றும் ஐரோப்பிய வெளி நடவடிக்கை சேவையின் கொள்கை அதிகாரி மைக்கேல் டோடினி உள்ளிட்டவர்கள் இச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இங்கு, இருதரப்பினரும் நாட்டின் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்து விரிவாகக் கவனம் செலுத்தினர். மேலும், GSP+ சலுகையை மேலும் மேம்படுத்துவதில் கவனம் செலுத்திய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இலங்கையின் ஆடைகள் உட்பட ஏற்றுமதிப் பொருட்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் அதிக சந்தை வாய்ப்புகளைப் பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்தார். நாட்டின் ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கவும், அமெரிக்கா நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு விதிக்கப்படும் 44% பரஸ்பர வரியின் தாக்கத்தைக் குறைப்பதற்கும் இதனால் முடியும் என்றார். (ம-4,7)


## கண்ணீர் அஞ்சலி



எனது சக பதிவாளர்களில் ஒருவரான
அமரர்
**தில்லையம்பலம் கோபாலகிருஷ்ணன்**
அவர்களின் திடீர் மறைவால் துயருற்றுத் தவிக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Dr. ஜெ.ஜெயலன் (சுஜீவா வைத்தியசாலை –யாழ்ப்பாணம்)
மருத்துவப் பதிவாளர் பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவு
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை
(C-2905)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் மூத்த உறுப்பினரும் வலிகாமம் கிழக்கு புத்தூர் பிரிவில் பதிவாளருமான
அமரர்
**தில்லையம்பலம் கோபாலகிருஷ்ணன்**
அவர்களின் திடீர் மறைவால் துயருற்றுத் தவிக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பதிவாளர்கள்
பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் சங்கம்
யாழ்ப்பாண மாவட்டம்
(C-2905)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சித் தேர்தல்

# ஒரு கோடியே 71 இலட்சத்து

## 56,338 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி



**(கொழும்பு)**

**339 உள்ளூராட்சி மன்றங்களுக்காக இன்று நடைபெறும் தேர்தலில் ஒரு கோடியே 71 இலட்சத்து 56,338 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.**

அத்தோடு, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை இன்னும் பெறாத வாக்காளர்கள் இன்று சம்பந்தப்பட்ட தபால் நிலையத்திற்குச் சென்று அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப் பத்திரம் மற்றும் செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ஆகியவற்றை எடுத்து வரவேண்டும்.

வாக்களிப்புக்கான தங்களுடைய ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக, அலுவலக அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை பெறுவதற்காக விண்ணப்பம் செய்தமைக்கான பிரதி ஆகியவற்றை எடுத்து வரவேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன், வாக்குச்சீட்டில் கட்சிகளின் பெயர்களுக்கு எதிரே கட்சிகளின் சின்னங்களும் சுயேட்சைக்குழுக்களின் பெயர்களுக்கு எதிரே சுயேட்சைக் குழுக்களின் சின்னங்களும் இருக்கும்.

அதற்கு எதிராக வெற்றுக் கட்டம் இருக்கும், அதில் புள்ளடி (X) இடவேண்டும்.

வாக்குச்சீட்டில் எழுதவோ, சித்திரம் கீறவோ, கிறுக்கவோ, எண்ணங்களை எழுத்வோ, பெயர்களை எழுதவோ வேண்டாம். புள்ளடி (X) இடப்படாத எந்தவொரு வாக்குச்சீட்டும் நிராகரிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவித்தார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 65,000 இற்கும் மேற் பட்ட பொலிஸ் அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

அத்துடன் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைக்காக சுமார் 3,000 அதிகாரிகள் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (நி-8)

## பல்கலை மாணவன் மீது தாக்குதல் 20 மாணவர்கள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனை தாக்கிக் காயப்படுத்தியதாகக் கூறப்படும் அதே பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 20 மாணவர்கள் பல்கலைக்கழக கற்கை நடவடிக்கைகளிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் பத்மலால் மனோஜ் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், இடைநிறுத்தம் செய்யப்பட்ட 20 மாணவர்களுக்கும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கடந்த 29 ஆம் திகதி ஹோமாகம பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றிற்குள் அத்துமீறி நுழைந்த ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் சிலர் அங்கு தங்கியிருந்த அதே பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மற்றுமொரு மாணவனைப் பலவந்தமாகத் தாக்கியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த பல்கலை மாணவன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பகிடிவதைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக காயமடைந்த பல்கலை மாணவன் தெரிவித்துள்ளார். (நி-8)

## கடந்த 24 மணி நேரத்துக்குள் 189 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

நாடு முழுவதும் இன்று உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் கடந்த 24 மணி நேரத்துக்குள் 189 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழுவின் ஊடக அறிவித்தலின் பிரகாரம் தெரிய வந்துள்ளது.

இவற்றுள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 164 முறைப்பாடுகளும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 3 முறைப்பாடுகளும் வேறு காரணங்களுக்காக 7 முறைப்பாடுகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இதேவேளை 20.03.2025 இலிருந்து 2025.05.03 வரையான குறித்த காலப்பகுதிக்குள் பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ், 43,339 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. (நி-8)

## உரமானியம் கிடைக்காததால் எதிர்பார்த்த விளைச்சலைப் பெறமுடியாது

### விவசாயிகள் குற்றச்சாட்டு



(கொழும்பு)

சிறுபோகத்திற்கான விளைச்சல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அரசாங்கத்தினால் வழங்கப்படும் உரமானியம் இதுவரையிலும் தங்களுக்குக் கிடைக்கவில்லை என விவசாயிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தற்போது சிறுபோக நெற்செய்கைக்காக பதினைந்தாயிரம் மெற்றிக் தொன் உரம் தேவைப்படுவதாக விவசாய அமைப்புகள் தெரிவித்துள்ளன.

குறித்த உரத்தொகையானது ஒரு மாதத்துக்கு முன்பாகவே வழங்கப்பட்டிருக்க வேண்டுமென அந்த அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன.

இவ்வாறு உரிய காலப் பகுதிக்குள் உரம் வழங்கப்படாமையால் எதிர்பார்த்தளவு விளைச்சலைப் பெற முடியாது எனவும் விவசாய அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன.

மானிய விலையில் உரம் வழங்கப்படாமையினால் அதிக விலைக்கு உரத்தை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (நி-8)

## பட்டை தீட்டப்படாத இரத்தினக்கல் ஏற்றுமதிக்கு வர்த்தகர்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

அரசாங்கம் முன்னெடுக்கவுள்ள பட்டைதீட்டப்படாத இரத்தினக் கல் ஏற்றுமதி செயற்பாட்டுக்கு இரத்தினக் கல் வர்த்தகர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இலங்கையின் இரத்தினக் கற்களுக்கு வெளிநாடுகளில் பெரும் மதிப்பு நிலவுகின்றது. அதன் ஏற்றுமதி ஊடாக இலங்கை குறிப்பிடத்தக்க அந்நியச் செலாவணியை ஈட்டி வருகின்றது.

இந்நிலையில், பட்டை தீட்டப்படாத இரத்தினக் கற்களை ஏற்றுமதி செய்வது தொடர்பில் தேசிய இரத்தினக் கல் அதிகார சபை அண்மைக் காலமாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இது குறித்து இலங்கையின் பிரதான இரத்தினக் கல் வர்த்தகர் சங்கங்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளன.

அவ்வாறு பெறுமதி சேர்க்காத, பட்டை தீட்டப்படாத இரத்தினக்கல் ஏற்றுமதி மூலம் இரத்தினக்கல் வர்த்தகத்துறை கடுமையான வீழ்ச்சியை சந்திக்கும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். (நி-8)

## லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் 3 மாதங்களில் 1267 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவுக்கு 1,250இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

ஜனவரி முதலாம் திகதி முதல் மார்ச் 31 ஆம் திகதி வரை 1,267 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் மாத்திரம் 24 பேருக்கு எதிராக நீதிமன்றங்களில் 21 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இலஞ்சம் ஊழல் விசாரணை ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓஹோ... மேகம் வந்ததோ

## மழையால் போட்டி பாதியில் இரத்து
## மங்கியது சன்ரைசர்ஸின் பிளே – ஓப் வாய்ப்பு




டில்லி - ஹைதராபாத் அணிகள் மோதிய பிரீமியர் லீக் போட்டி மழையால் பாதியில் இரத்தானது.

ஹைதராபாத்தில் நடந்த பிரீமியர் லீக் போட்டியில் ஹைதராபாத் - டில்லி அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணியின் தலைவர் கம்மின்ஸ் பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

**விக்கெட் சரிவு:**

டில்லி அணிக்கு, ஹைதராபாத் அணித் தலைவர் கம்மின்ஸ் தொல்லை கொடுத்தார். ஆட்டத்தின் முதல் பந்தில் கருண் நாயரை (0) அவுட்டாக்கினார். இவரது "வேகத்தில்" டுபிளசி (3), அபிஷேக் போரெலும் (8) வெளியேறினர். அணித் தலைவர் அக்சர் படேல் (6), லோகேஷ் ராகுல் (10) சோபிக்கவில்லை. டில்லி அணி ஒரு கட்டத்தில் 29 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைப் பறிகொடுத்துத் திணறியது.

**ஆறுதல் ஜோடி:**

பின் இணைந்த டிரிஸ்டன் ஸ்டப்ஸ், விப்ராஜ் நிகாம் ஜோடி விக்கெட் சரிவிலிருந்து அணியை மீட்டது. ஜீஷான் அன்சாரி வீசிய 10வது ஓவரில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்தார் விப்ராஜ். நிதானமாக ஆடிய ஸ்டப்ஸ், ஹர்ஷல் பந்தில் ஒரு பவுண்டரி அடித்தார். ஆறாவது விக்கெட்டுக்காக 33 ஓட்டங்கள் சேர்த்தபோது விப்ராஜ் (18) "ரன்-அவுட்" ஆனார். "இம்பாக்ட்" வீரர் அஷூதோஷ் சர்மா, ஜீஷான் அன்சாரி வீசிய 15வது ஓவரில் 2 சிக்சர்களை பறக்கவிட்டார். தொடர்ந்து அசத்திய இவர், ஹர்ஷல் வீசிய 17வது ஓவரில் 2 பவுண்டரிகள் விரட்டினார். டில்லி அணி 16.5 ஓவரில் 100 ஓட்டங்களைக் கடந்தது.

எஷான் மலிங்க வீசிய 18வது ஓவரில் 2 பவுண்டரி அடித்தார் ஸ்டப்ஸ். ஹர்ஷல் பந்தில் ஒரு சிக்சர் விளாசிய அஷூதோஷ் (41), 7ஆவது விக்கெட்டுக்காக 66 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார். எஷான் மலிங்க வீசிய கடைசி பந்தை பவுண்டரிக்கு விரட்டினார் ஸ்டப்ஸ்.

20 ஓவர்கள் நிறைவில் டில்லி அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களை எடுத்தது. ஸ்டப்ஸ் (41), ஸ்டார்க் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**நழுவிய வாய்ப்பு:**

ஹைதராபாத் அணியின் வெற்றிக்கு 20 ஓவர்களில் 134 ஓட்டங்கள் தேவைப்பட்டது. ஆனால் மழையால் போட்டி நிறுத்தி வைக்கப்பட்டது. மழை நின்றபின் மைதானத்தில் தண்ணீர் தேங்கி இருந்ததால் போட்டி பாதியில் இரத்து செய்யப்பட்டது. இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

ஹைதராபாத் அணி 11 போட்டியில், 3 வெற்றி உட்பட 7 புள்ளிகளுடன் உள்ளது. மீதமுள்ள 3 போட்டியில் வென்றால் கூட 13 புள்ளி மட்டுமே பெறும். இதனையடுத்து ஹைதராபாத் அணி "பிளே-ஓப்" வாய்ப்பை இழந்தது. (ம-4,7)

# மாட்ரிட் ஓபன் டென்னிஸ் சம்பியனான காஸ்பர் ரூட்



மாட்ரிட் ஓபன் டென்னிஸ் சம்பியன் பட்டத்தை கைப்பற்றிய காஸ்பர் ரூட்.

மாட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடைபெற்றது. இதில் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் நோர்வே வீரர் காஸ்பர் ரூட், பிரிட்டன் வீரர் ஜாக் டிராபர் உடன் மோதினார்.

இதில் முதல் செட்டை 7-5 என காஸ்பர் ரூட் கைப்பற்றினார். பதிலுக்கு டிராபர் 2வது செட்டை 6-3 என வென்றார்.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டை 6-4 என காஸ்பர் ரூட் கைப்பற்றி சம்பியன் பட்டம் வென்று அசத்தினார். (6-8)

# பிளே-ஓப் வாய்ப்பினை கட்டாயம் தக்க வைப்போம்

## லக்னோ கப்டன் ரிஷப் பண்ட்




ஐ.பி.எல். தொடரின் 54 ஆவது லீக் ஆட்டம் தரம்சாலாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பஞ்சாப் கிங்ஸ், லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின. இதில் 37 ரன்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் அணி அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில், தோல்விக்குப் பிறகு லக்னோ அணி கப்டன் ரிஷப் பண்ட் கூறியதாவது, பிளே ஓப் செல்வதற்கான வாய்ப்பு இன்னும் இருக்கிறது. அடுத்த 3 போட்டியில் வெற்றி பெற்றால், நிச்சயமாக அற்புதமான விஷயங்களைச் செய்ய முடியும்.

236 ரன்கள் என்பது துரத்துவதற்கு மிக அதிகம். பீல்டிங்கும் சரியாக இல்லை. நிச்சயமாக அதிக ரன்கள். தவறான நேரத்தில் முக்கியமான கேட்ச்களை தவறவிட்டால், அது உங்களை மோசமாக பாதிக்கும்.

நாங்கள் தொடக்கத்தில் சரியான பாதையைத் தேர்வு செய்யவில்லை. ஆனால் அது விளையாட்டின் ஒரு பகுதி. டாப் ஆர்டர் நன்றாக பட்டிங் செய்யும்போது அது அர்த்தமுள்ளதாக இருக்கும். ஒவ்வொரு போட்டியிலும், அவர்கள் வெளியே வருவார்கள் என நம்ப முடியாது. இது விளையாட்டின் ஒரு பகுதி என தெரிவித்தார். (6-8)

# மேக்ஸ்வெல்லுக்கு பதில் வீரராக ஆஸி. ஆல்ரவுண்டர்

கிளன் மேக்ஸ்வெல்லுக்கு மாற்று வீரராக பஞ்சாப் கிங்ஸ் அணியில் ஆஸ்திரேலிய ஆல்ரவுண்டர் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஐபிஎல் தொடரில் பஞ்சாப் கிங்ஸ் அணிக்காக விளையாடி வரும் அவுஸ்திரேலிய அணியின் ஆல்ரவுண்டரான கிளன் மேக்ஸ்வெல்லுக்கு இந்த சீசன் சிறப்பானதாக அமையவில்லை. நடப்பு ஐ.பி.எல் தொடரில் 7 போட்டிகளில் விளையாடிய அவர் வெறும் 48 ரன்கள் மட்டுமே எடுத்துள்ளார். விளையாடிய 7 போட்டிகளில் 6 போட்டிகளில் அவர் ஒற்றை இலக்க ரன்களில் ஆட்டமிழந்தார்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ்க்கு எதிராக கடந்த ஏப்ரல் 26 ஆம் தேதி நடைபெற்ற போட்டியில் கிளன் மேக்ஸ்வெல்லுக்கு விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. இதனையடுத்து, அவர் நடப்பு ஐ.பி.எல் தொடரின் மீதமுள்ள போட்டிகளிலிருந்து விலகினார்.

காயம் காரணமாக மேக்ஸ்வெல் விலகிய நிலையில், அவருக்கு மாற்று வீரராக ஆஸ்திரேலிய அணியின் ஆல்ரவுண்டரான மிட்ச் [illegible] அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். (6-8)

# இன்றைய ஆட்டங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனானது தாதியர் பயிற்சி கல்லூரி



(யாழ்ப்பாணம்)

உலக தாதியர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட யாழ் மாவட்ட தாதியர்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட போட்டியில் தாதியர் பயிற்சி கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

உலக தாதியர் தினத்தை முன்னிட்டு யாழ் மாவட்ட தாதியர்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட போட்டிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் தாதியர் பயிற்சி கல்லூரி அணியை எதிர்த்து யாழ் போதனா வைத்தியசாலை தாதியர் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர். இருப்பினும் ஆட்ட நேர முடிவில் தாதியர் பயிற்சி கல்லூரி அணி 9:8 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். (6-8-90)

# கொள்ளையடிக்கப்பட்ட 35 பவுண் நகைகள் மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் 80 இலட்சம் பெறுமதியான 35 பவுண் தங்க நகைகளினை மீட்டுள்ளதாக வவுனியா நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த இரு தினங்களுக்கு முன்பாக வவுனியா கணேசபுரம் பகுதியில் உள்ள வீட்டில் இருந்து 35 பவுண் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டதாக முறைப்பாடு கிடைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இக்கொள்ளை சம்பவம் தொடர்பாக வவுனியா நெளுக்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி டி.எம்.ஏ.சமரகோன் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டு விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந் நிலையில் நேற்று முன்தினம் மாலை கொக்குவெளி பகுதியில் வைத்து 29 வயது இளைஞன் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், அவரிடம் இருந்து 35 பவுண் தங்க நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன் சந்தேக நபர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# வாக்குப் பெட்டிகளுடன் அதிகாரிகள் நெடுந்தீவு வந்தடைவு



(யாழ்ப்பாணம்)

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்களுக்காக நெடுந்தீவில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப்பெட்டிகளுடன் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் நேற்று காலை 11 மணியளவில் நெடுந்தீவை வந்தடைந்தனர்.

குறிகாட்டுவான் துறைமுகத்தில் இருந்து ஏற்பாடு செய்யப்பட்ட படகு மூலம் வந்தடைந்தவர்கள், நெடுந்தீவில் உள்ள 8 வாக்களிப்பு நிலையங்களுக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட வாகனங்கள் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# வாக்காளர்களுக்கு வழங்கவிருந்த ஒரு தொகை அரிசி மூடைகள் பறிமுதல்

(கல்முனை)

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி பகுதியில் பாரவூர்தி ஒன்றினூடாக கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகை அரிசி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக குறித்த அரிசிதொகை கொண்டு செல்லப்படுவதாக மட்டக்களப்பு மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய அவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பாரவூர்தியும் அதன் சாரதியும் களுவாஞ்சிக்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 கிலோகிராம் நிறையுடைய 250 அரிசி மூடைகளே இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்த விடயம் குறித்த விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6-8)

# உலக சம்பியன்ஷிப் பளுதூக்கல் யாழிலிருந்து நால்வர் தெரிவு



(யாழ்ப்பாணம்)

உலக சம்பியன்ஷிப் பளுதூக்கல் போட்டிக்கு யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உலக சம்பியன்ஷிப் பளுதூக்கல் போட்டி ஜூலை மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை தாய்லாந்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த வி.ஆஷிகா, ஜெ.ஜெகனிகா, சி.புளோரிஸ்ரா, ச. அபிஷன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-90)

# இராசிபலன்

06.05.2025
சித்திரை 23, செவ்வாய்க்கிழமை
மகம் முன்னிரவு 7.52 மணிவரை

நவமி பிற்பகல் 1.12 மணிவரை
சுபநேரம் 10.26-11.56 மணிவரை
இராகுகாலம் 2.56-4.26 மணிவரை

சந்திராஷ்டமம்- உத்தராடம், திருவோணம்.

வளவன்




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாடு திருப்தி தரும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிள்ளைகள் குடும்பப் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வார்.




வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெற்றோர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வருமானம் திருப்தி தரும்.




குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும்நாள், வாக்கு மேன்மையுண்டு.




நண்பர்களிடம் ஒழிவு மறைவு இன்றிப் பழகுவீர்கள், குடும்பச் சுமை கூடும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வார், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.




தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.




அரைகுறையாக இருந்த பணிகளை ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.




சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, குடும்பத்தினரிடையே சிறு சிறு முரண்பாடுகள் தோன்றி மறையும்.




மதிநுட்பத்தால் மகத்தான காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




உடல் நலனில் இருந்த உபாதைகள் அகலும், உறவுகள் ஒற்றுமையாக இருக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் நாள்.

ஆயுளை நிர்ணயிப்பது செயல்கள், ஆண்டுகள் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் அனுப்பி வைப்பு










(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு பொலிஸ் பாதுகாப்புடன் நேற்று எடுத்துச் செல்லப் பட்டன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னாரில் நிறுவப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கே வாக்குப் பெட்டிகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் அனுப்பி வைக்கப் பட்டிருந்தன.

இந் நிலையில் இன்று இடம் பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் யாழில் 4,98140 பேரும், கிளிநொச்சியில் 1, 02387 பேரும், முல்லையில் 87, 800 பேரும், வவுனியாவில் 1, 29293 பேரும், மன்னாரில் 91, 373 பேரும் வாக்காளர்களாக வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(6-8-33-100-250-285-299-316)







## உரும்பிராய் - மருதனார்மடம்
### குறுக்குவீதியைப் புனரமைக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய்ச்சந்தியில் இருந்து யாழ் நகர் நோக்கி வரும் குறுக்கு வீதியை செப்பனிட்டு போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித்தருமாறு உரும்பிராய் ஞான வைரவர் கோவிலடி சனசமூக நிலையத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உரும்பிராய் சந்தியிலிருந்து யாழ் நகரை நோக்கி வரும் வீதியையும், மருதனார்மடம் செல்லும் வீதியையும் இணைக்கும் வகையில் சுமார் 15 மீற்றர் நீளமான குறுக்கு வீதி உரும்பிராய் சந்தியை அண்மித்துக் காணப்படுகின்றது. இவ்வீதி நீண்ட காலமாக பாவனையில் இருந்தது. ஆனால் கடந்த சில வருடங்களாக தனிப்பட்டவர்கள் சிலர் தமது வாகனங்களை நிறுத்தும் இடமாக ஆக்கிரமித்துள்ளனர். இதனால் இவ் வீதியைப் பயன்படுத்த முடியாமல் பொது மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே இதனைக் கருத்திற்கொண்டு யாழ்ப்பாணம் வீதியைச் செப்பனிட்டு போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித்தருமாறு உரும்பிராய் ஞான வைரவர் கோவிலடி சனசமூக நிலையத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

(நி-3-8)

## விபத்துக்கள் ஏற்படும் அபாயம்
### வேகக் கட்டுப்பாட்டு தடை வேண்டும்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சந்தியிலிருந்து கோப்பாய் நோக்கிச் செல்லும் வீதியில் வீதி வேகக் கட்டுப்பாட்டுத் தடையினை ஏற்படுத்தி தருமாறு உரும்பிராய் ஞான வைரவர் கோவிலடி சனசமூக நிலையத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உரும்பிராய் சந்தியிலிருந்து கோப்பாய் நோக்கிச் செல்லும் வீதியில் 200 மீற்றர் தொலைவில் ஞானவைரவர் கோவில், சனசமூக நிலையம், தனியார் கல்வி நிலையம், கடைகள் என்பன வீதியின் இருபுறத்திலும் நெருக்கமாக அமைந்துள்ளன. ஞானவைரவர் கோயிலையும், ஞானவைரவர் சனசமூக நிலையத்தையும் இணைத்து மஞ்சள் கோடு வீதிக்கு குறுக்கே அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் சுமார் 50 மீற்றர் தொலைவில் வீதி வளைவு ஒன்று உள்ளது.

கோப்பாய் பகுதியிலிருந்து உரும்பிராய் நோக்கி வரும் வாகனங்கள் அதி வேகமாக வருவதனால் மஞ்சள் கோட்டின் வழியாக வீதியைக் கடப்பவர்கள் கூட பல அசௌகரியங்களுக்கு உள்ளாவதுடன் விபத்துச் சம்பவங்களும் ஏற்படும் நிலை உண்டு.

எனவே இதனைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து பொருத்தமான வீதி கட்டுப்பாட்டுத் தடையினை அமைத்துத் தருமாறு உரும்பிராய் ஞானவைரவர் கோவிலடி சனசமூக நிலையத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(6-3-8)

## தேர்தலை முன்னிட்டு நெடுந்தீவுக்கு விசேட சேவை

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு நெடுந்தீவு வாக்காளர்களுக்காக இன்று விசேட படகு சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று நெடுந்தீவு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

வாக்காளர்களின் வசதிக்காக நெடுந்தீவு மற்றும் குறிகாட்டுவான் துறைமுகங்களுக்கிடையில் கீழ்க்காணும் நேரங்களில் மேலதிக படகு சேவைகள் இடம் பெறவுள்ளது.

நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து: காலை6.45-குமுதினி படகு, 7.30 - நெடுந்தாரகை படகு, 11.30-கரிகணன் படகு, பிற்பகல் 2.30- குமுதினி படகு, 3மணிக்கு நெடுந்தாரகை படகும், குறிகாட்டுவான் துறைமுகத்திலிருந்து காலை 8 மணிக்கு- குமுதினி படகு, 8.30- நெடுந்தாரகை படகு, பிற்பகல் 1- கரிகணன்படகு, 3.30- குமுதினி படகு, 4.30 - நெடுந்தாரகை படகு ஆகியவை சேவையில் ஈடுபடவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (6-8)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 550 | 300 | 350 | 500 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | 195 | 240 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 200 | 150 | 250 |
| தக்காளி | 900 | 900 | 1000 | 800 | 1000 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 400 | 400 | 500 | 330 | 500 |
| கரட் | 850 | 1100 | 1200 | 1000 | 1000 |
| பூசணி | 200 | 220 | 270 | 200 | 200 |
| புடோல் | 200 | 250 | 150 | 300 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 60 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 250 | 120-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 150 | 120 | 130 | 110 | 120 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 450 | 600 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 250 | 480 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 250 | 300 |
| பயற்றங்காய் | 400 | 450 | 350 | 300 | 400 |
| லீக்ஸ் | 300 | 300 | 350 | 250 | 400 |
| பீற்றூட் | 550 | 550 | 400 | 450 | 600 |
| கறிமிளகாய் | 800 | 600 | 400 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 1600 | 2600 | 2000 | 1500-2000 | 2400 |
| போஞ்சி | 700 | 850 | 800 | 500 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 450 | 400 | 300 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 100 | 80-160 | 70 | 60 | 150 |
| தேசிக்காய் | 200 | 300 | 200 | 320 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 150 | 120-200 | 200-240 |
| இராசவள்ளி | 650 | 700 | 500 | 450 | 700 |
| வெங்காயப்பூ | -- | 650 | 1200 | -- | 800 |
| முள்ளங்கி | 150 | 200 | 200 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 70 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு, சிக்குன்குனியா பரவும் அபாயம்

(கொழும்பு)

தற்போது நாட்டில் பெய்து வரும் மழையால் டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்கள் பரவும் அபாயம் அதிகம் இருப்பதாகச் சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

டெங்குவைப் பரப்பும் அதே நுளம்புகள் மூலமே சிக்குன்குனியா பரவுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டில் இலங்கையில் 17,816 டெங்கு நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த மாதத்தில் மட்டும் நாட்டில் 5,175 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர். கடந்த 5 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏப்ரல் மாதத்தில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவான மாதமாக இது பதிவாகியுள்ளது.

சிக்குன்குனியாவினதும் முதன்மை அறிகுறி காய்ச்சல் தான் என வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர். (நி-8)

# வில்லூன்றியில் சித்திரா பூரணை

யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய சித்திரா பூரணைப் பெருவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை வில்லூன்றி புனித தீர்த்தத்தில் இடம்பெறவுள்ளது. வில்லூன்றி விநாயகராலயத்தில் அதிகாலை விசேட அபிஷேகம், பூசைகளும், காலை ஏழு மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் காலை எட்டு மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்றபின் பொது மக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த்தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆலய தர்மகர்த்தாவும் முகாமையாளருமாகிய இ.குமாரவடிவேல் தெரிவித்துள்ளார். (3-8)

# போதைப் பொருட்களுடன் 119 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருட்களுடன் 119 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹெரோயின் போதைப் பொருளுடன் 32 பேரும், ஐஸ் போதைப் பொருளுடன் 52 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 31 பேரும்,

ஹேஷ் போதைப்பொருளுடன் 3 பேரும், போதை மாத்திரைகளுடன் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-8)

# சாமரவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

பதுளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப் பதுளை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி 3 குற்றச்சாட்டுக்களின் கீழ் கைதான அவர் அன்றைய தினம் கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது இரண்டு குற்றச்சாட்டுக்களுக்காக அவருக்கு பிணை வழங்கப்பட்டது. எனினும் மேலுமொரு குற்றச்சாட்டுக்காக அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்தநிலையில், குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே பதுளை நீதவான் நுஜித்டி சில்வாவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பிலேயே அவருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# வாக்களிப்பு நிலையங்களுக்குள் புகைப்படம் எடுப்பதை தவிருங்கள்

## தேர்தல் ஆணையகம் அறிவுறுத்து

(கொழும்பு)

இன்றைய தினம் நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தல்களில் வாக்களிப்பின் போது வாக்காளர்கள் தவிர்க்க வேண்டிய விடயங்கள் குறித்துத் தேசிய தேர்தல் ஆணையகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளின் புகைப்படம் மற்றும் வீடியோக்களை எடுப்பதைத் தவிர்க்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, வாக்குச் சாவடிகள் மற்றும் வாக்குச் சீட்டுகளின் புகைப்படங்கள் அல்லது வீடியோக்களை சமூக ஊடகங்களில் பகிர்வதைத் தவிர்க்கவும் என அவ் அறிக்கையில்பொது மக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# மருந்து விலையை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

மருந்து விலைகளைக் குறைக்க வேண்டியதன் அவசியம் மற்றும் அதற்காக அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சுகாதார அமைச்சில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் மருந்துகளின் விலைகளைக் குறைக்க வேண்டியதன் அவசியத்தையும், பற்றாக்குறை இல்லாமல் மருந்துகள் விநியோகத்தை உறுதி செய்வதன் அவசியத்தையும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெளிவுபடுத்தியுள்ளார்.

இக் கலந்துரையாடலில்,அகில இலங்கை மருந்தக உரிமையாளர்கள் சங்கம், மருந்து முதலீட்டு சபை, தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணைக் குழு உள்ளிட்ட மருந்தக இறக்குமதி மற்றும் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

## வணிகமாணி சிறப்பு பட்டப்படிப்பு -2023/2024
## Bachelor of Commerce Honours Degree Programme – 2023/2024

### புதிய அனுமதிக்கான விண்ணப்பம்-2025- அணி- IX

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த நான்கு வருட கால வணிகமாணி சிறப்புக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

❖ க.பொ.த. (உ/த) பரீட்சை (வணிகப்பிரிவு) - 2023 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியானவர்கள்.

**அல்லது**

❖ பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான தகைமையைக் கொண்டவர்கள்.

**வணிகமாணியில் பாட அலகுகளிற்கான விலக்களிப்புக் கோருதல்:**

வணிகமாணி கற்கை நெறியில் காணப்படும் பாட அலகுகள் அல்லது அதற்குச் சமனான பாட அலகுகளை உள்ளடக்கிய கற்கை நெறிகளில் சித்தியடைந்தோர், உரிய தகைமைகளைக் குறிப்பிட்டு விலக்களிப்புக்கு விண்ணப்பிக்க முடியும். அவர்கள் தகைமை பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் **பாட அலகுகளிற்கான** விலக்களிப்பு அனுமதிக்கப்படும்.

**மாணவர் தெரிவு:**

விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் (Z-Core) அல்லது பொது உளச்சார்புப்பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது மூன்றின் மூலமும் தெரிவு செய்யப்படுவார்கள். பொது உளச்சார்புப் பரீட்சைக்கான தேவை ஏற்படின் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பக் கட்டணமாக ரூபா 1000.00 இனை 890092080000060 என்ற மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் செலுத்தி www.codl.jfn.ac.lk எனும் இணைய முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை முறையாக பின்பற்றி https://forms.gle/4DU71XQRL8uv8vP19 எனும் இணைப்பின் ஊடாக விண்ணப்பித்துக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

விண்ணப்ப முடிவுத்திகதி : 21.07.2025 (திங்கட்கிழமை) (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

மேலதிக விபரங்களை 021222 3612 என்ற தொலைபேசி எண்ணூடாக அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுகொள்ளலாம்.

(சி-2900)

**பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி.**

# CORRECTION OF INVITATION FOR BIDS 2025/ 03
# PUTHUKKUDIYIRUPPU PRADESHIYA SABHA

This is reference to the above matter, there is a correction on INVITATION FOR BIDS 2025/ 03 which is published on 05.05.2025 by Puthukkudiyiruppu Pradeshiya Sabha (Valampurii News Paper Page No 06). The Estimated cost of the Work of Construction of Internal Access Road, Drainage System, Boundary Wall and Development of Surrounding Area of the Puthukkudiyiruppu Pradeshiya Sabha is change as 18.98 Million.

| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | Amount (Rs.) | Validity Period |
| 01 | NP/14/44(04)/Coun/Works/12/2025 | Construction of Internal Access Road, Drainage System, Boundary Wall and Development of Surrounding Area of the Puthukkudiyiruppu Pradeshiya Sabha | Council | 18.98 | 84 | C7 or Above (Highway) | 5,000.00 | 5-Aug-2025 | 280,000.00 | 2-Sep-2025 |

**Chairman**
**Local Authority Procurement Committee, Puthukkudiyiruppu Pradeshiya Sabha,**
**Paranthan Road, Puthukkudiyiruppu.**

(C-2890)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## அல்காட்ராஸ் சிறைச்சாலையை மீண்டும் திறக்க ட்ரம்ப் உத்தரவு



(வோஷிங்டன்)

கலிபோர்னியா கடற்கரையில் அமைந்துள்ள ஒரு தீவில் உள்ள முன்னாள் சிறைச்சாலையான அல்காட்ராஸை மீண்டும் திறந்து விரிவுபடுத்த தனது அரசாங்கத்திற்கு உத்தரவிட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

இது குறித்து சமூக ஊடகமான ட்ரூத் தளத்தில் நேற்று முன்தினம் பதிவிட்ட அவர் அல்காட்ராஸ் சிறைச்சாலை மீண்டும் திறக்கப்படுவது "சட்டம், ஒழுங்கு மற்றும் நீதியின் அடையாளமாக" செயற்படும் என்றும் தெரிவித்தார்.

அல்காட்ராஸில் உள்ள கூட்டாட்சி சிறைச்சாலை 1963 இல் மூடப்படுவதற்கு முன்பு அல்கபோன் போன்ற மோசமான அமெரிக்கக் குற்றவாளிகளை வைத்திருந்தது.

இது இப்போது சான் பிரான்சிஸ்கோவின் மிகவும் பிரபலமான சுற்றுலாத் தளங்களில் ஒன்றாகும்.

புளோரிடாவிலிருந்து வெள்ளை மாளிகைக்குத் திரும்பிய ட்ரம்ப் இது தொடர்பில் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

சிறைச்சாலையை மீண்டும் திறப்பது "எனக்கு இருந்த ஒரு யோசனை" என்றும், அதைச் செயற் படுத்த முடிவு செய்ததாகவும் கூறினார்.

"இது சட்டம் ஒழுங்கின் சின்னம்," என்று அவர் கூறினார்.

தீவின் இருப்பிடம், குளிர்ந்த நீர் மற்றும் வலுவான நீரோட்டங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அல்காட்ராஸ் அமெரிக்காவின் மிகவும் பாதுகாப்பான சிறைச்சாலையாகக் கருதப்படுகிறது. அல் காட்ராஸிலிருந்து வெற்றிகரமாக தப்பித்தவர்கள் யாரும் அதிகாரப்பூர்வமாகப் பதிவு செய்யப்படவில்லை. இருப்பினும் சிறைச்சாலையில் இருந்து தப்பிய ஐந்து கைதிகள் காணாமல் போனதாகவும், நீரில் மூழ்கி இறந்ததாகவும் கருதப் படுகிறது. (நி-8)

# இந்தியா - பாகிஸ்தா...

# அவசரமாகக் கூடுகிறது ஐ...

**(ஜெனீவா)**

**இந்தியா - பாகிஸ்தான் இடை... போர்ப் பதற்றம் தணிக்க வேண்டு... நாடுகள் கோரிக்கை விடுத்து வரு...**

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சில் கூட்டம் அவசரமாகக் கூடுகிறது. இந்த கூட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் இடையேயான விவகாரம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட உள்ளது.

காஷ்மீர் பஹல்காமில் கடந்த மாதம் 22ஆம் திகதி பயங்கரவாதத் தாக்குதலில் சுற்றுலாப் பயணிகள் உட்பட 26 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்துக்கு பிறகு பாகிஸ்தானுடனான உறவை இந்தியா முற்றிலும் துண்டித்துள்ளது. மேலும் பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சிந்து நதி நீர் ஒப்பந்தம் ரத்து, பாகிஸ்தான் விமானங்கள் இந்திய வான்வெளியில் பறக்கத் தடை, பாகிஸ்தானியர்கள் வெளியேற்றம் என அடுத்தடுத்து நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதேபோல பாகிஸ்தானும் இந்தியாவுக்கு



## 72 மணிநேர போர் நிறுத்தத்தை நிராகரித்தார் உக்ரைன் ஜனாதிபதி!





(கீவ்)

ரஷ்யாவின் வெற்றிக் கொண்டாட்டத்தில் பங்கேற்க பல்வேறு நாட்டுத் தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ள நிலையில் தற்காலிக போர் நிறுத்தத்திற்கு ரஷ்ய ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். அதனை உக்ரைன் ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

உக்ரைன் - ரஷ்யா போர் கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து முடிவின்றி நடைபெற்று வருகிறது.

கடந்த ஈஸ்டர் ஞாயிறு அன்று முதல் முறையாக 1 நாள் மட்டும் தாற்காலிகப் போர் நிறுத்தம் ஏற்பட்டது.

இதற்கிடையே இரண்டாம் உலகப் போரில் சோவியத் யூனியன் மற்றும் அதன் நட்பு நாடுகளின் வெற்றியின் 80ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இந்த மாதம் ரஷ்யாவில் வெற்றி அணிவகுப்பு நடைபெற உள்ளது.

இந்த வெற்றி அணிவகுப்புக்கு இந்தியப் பிரதமர் மோடி உட்பட பல்வேறு உலகத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளன.

எனவே இதனை முன்னிட்டு மே 8 ஆம் திகதி தொடக்கத்தில் இருந்து மே 10 ஆம் திகதி இறுதி வரை 72 மணி நேர போர் நிறுத்தத்தை ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவித்தார்.

மேலும் உக்ரைன் இந்த போர் நிறுத்தத்தை ஏற்க வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி ரஷ்யாவின் போர் நிறுத்தத்தை நிராகரித்துள்ளார்.

ரஷ்யாவின் அழைப்பின் பெயரில் வரும் 9 ஆம் திகதி வெற்றி அணிவகுப்பைக் காண வரும் வெளிநாட்டுத் தலைவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் கொடுக்க முடியாது என்று ஜெலன்ஸ்கி எச்சரித்துள்ளார்.

ரஷ்ய பிரதேசத்தில் நிகழும் நிகழ்வுகளுக்கு நாங்கள் பொறுப்பல்ல, அவர்கள் உங்களைப் பாதுகாப்பார்கள். நாங்கள் உங்களுக்கு எந்த உத்தரவாதமும் அளிக்கவில்லை என்று ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

இதற்கிடையில், உக்ரைனில் ரஷ்ய ஆளில்லா விமானம் மற்றும் ட்ரோன்கள் நடத்திய தாக்குதலில் 47 பேர் காயமடைந்தனர். உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரமான கார்கிவின் 12 பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தாக்குதல்கள் நடந்தன.

இந்தத் தாக்குதலில் கட்டடங்கள், பொது உட்கட்டமைப்பு மற்றும் வாகனங்கள் சேதமடைந்தன. உக்ரைன் அமெரிக்காவுடன் கனிம ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## வெ... 10...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ான் போர்ப்பதற்றம்! ஐ.நா பாதுகாப்பு சபை!

...டையே ஏற்பட்ட
...டும் என உலக
...ருகின்றன.





எதிராக அதிரடி நடவடிக் கைகளை எடுத்து வரு கிறது

ஆக்ரோஷமான இந்தியா வின் நடவடிக்கைகள் குறித்து பாகிஸ்தான் ஐ.நா. பாது காப்பு கவுன்சில் கூட்டத்தில் புகார் தெரிவிக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள் ளன.

இதேபோல இந்தியா தரப்பிலும் தங்கள் தரப்பு நியாயங்களை முன்வைக்க இருக்கிறது.

இது தொடர்பாக ஐ.நா சபைக்கான கிரேக்கத்தின் நிரந்தர பிரதிநிதியும், மே மாதத்திற்குரிய பாதுகாப்பு கவுன்சில் தலைவருமான எவாஞ்சலோஸ் கூறும் போது அனைத்துக் கோணங்களிலும் பயங்கர வாதத்தை எதிர்க்கி றோம்.

அதே வேளையில் அதிகரித்து வரும் பதற்றம் கவலை அளிப்பதாக உள் ளது என தெரிவித்தார்.

மேலும் இந்தியா-பாகிஸ் தான் நாடுகளுக்கு இடையே பதற்றமான சூழ்நிலை நிலவி வரும் நிலையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டம் நடைபெற இருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (நி-8)

## பாகிஸ்தான் பிரபலங்களின் எக்ஸ் தள பக்கங்கள் முடக்கம்

### இந்தியாவின் அடுத்த அதிரடி

(இஸ்லாமாபாத்)

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானைச் சேர்ந்த பிரபலங்களின் சமூக வலைதளக் கணக்குகள் இந்தியாவில் முடக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி, அந்நாட்டின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மற்றும் முன்னாள் அமைச்சர் பிலாவல் பூட்டோ வின் எக்ஸ் தளப் பக்கக் கணக்குகள் இந்தியாவில் முடக்கப்பட்டுள்ளன.

சமீபத்தில், பாகிஸ்தான் நடிகர்களான மகிரா கான், ஹனியா ஆமிர், சனம் சயீத், அலி ஜாபர், பிலால் அப்பாஸ், இக்ரா அஜீஸ், அயேஸா கான், சஜல் அலி ஆகியோரின் இன்ஸ்டாகிராம் பக்கங்கள் இந்தியாவில் முடக்கப்பட்டன.

இந்தியாவில் இருந்து இவர்களின் பக்கங்களை அணுக முயன்றால், மத்திய அரசின் சட்டபூர்வ கோரிக் கையை ஏற்று முடக்கப் பட்டதாகத் தகவல் வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீஃபின் யூடியூப் சனலும் முடக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (நி-8)

## இந்தியா - பாகிஸ்தான் போர்ப்பதற்றம் ரஷ்யாவின் உதவியை நாடிய பாகிஸ்தான்



(இஸ்லாமாபாத்)

காஷ்மீரில் கடந்த மாதம் 22 ஆம் திகதி பஹல்காம் சுற்றுலாத் தளத்தில் பயங்கர வாதிகள் நடத்திய தாக்குத லில் 26 அப்பாவிச் சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டனர்.

பஹல்காம் தாக்குதலுக்கு பின் இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப்பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்நிலை யில் ரஷ்யாவின் உதவியை பாகிஸ்தான் நாடியுள்ளது.

ரஷ்யச் செய்தி நிறு வனத்துக்குப் பேட்டி கொடுத்த ரஷ்யாவுக்கான பாகிஸ்தான் தூதர் முகமது காலித் ஜமாலி, "இந்தியா மற்றும் பாகிஸ் தானுடன் நல்ல உறவில் இருக்கும் ரஷ்யா, இரு நாடுக ளுடனான பேச்சுவார்த் தைக்கு மத்தியஸ்தம் செய்ய வேண்டும்" என்று வேண்டு கோள் விடுத்தார். (நி-8)

## ...வெளிநாட்டு திரைப்படங்களுக்கு ...00 வீத வரி விதித்த ட்ரம்ப்




(வோஷிங்டன்)

உலகெங்கிலும் உள்ள நாடுகளுடன் ...ர்த்தக மோதல்கள் அதிகரித்து ...ருவதால் வெளிநாடுகளில் தயாரிக்கப் ...டும் திரைப்படங்களுக்கு 100% வரி ...திக்கப் போவதாக அமெரிக்க ஜனாதி ...தி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுத் திரைப்படத்துறை "மிக ...ரைவான மரணத்தை" சந்தித்து ...ருவதால், வரி விதிக்கும் செயல் ...றையைத் தொடங்க அமெரிக்க ...ர்த்தகப் பிரதிநிதிக்கு அதிகாரம் ...ளிப்பதாக ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

...ஜனவரி மாதம் வெள்ளை மாளி ...கைக்குத் திரும்பியதிலிருந்து, ட்ரம்ப் உலகெங்கிலும் உள்ள நாடு கள் மீது வரிகளை விதித்து வருகின்றார்.

வரிகள் அமெரிக்க உற்பத் தியாளர்களை ஊக்குவிக்கும் மற்றும் தொழில் வாய்ப்பு களை பாதுகாக்கும் என்று அவர் குறிப்பிடுகிறார்.

ஆனால் இதன் விளை வாக உலகப் பொருளாதாரம் குழப்பத்தில் தள்ளப்பட்டுள் ளது. மேலும் உலகம்முழுவ தும் பொருட்களின் விலைகள் உயரும் என்றும் எதிர்பார்க் கப்படுகிறது. (நி-8)

### ஹவுதிகளை சும்மா விடமாட்டோம்!

## விமான நிலைய தாக்குதலால் கொந்தளித்த இஸ்ரேல்

(ஜெருசலேம்)

பாலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல் இன்னும் முடி வுக்கு வந்த பாடில்லை. தொடர்ந்து இரு தரப்பின ருக்கும் இடையே 2 ஆண்டுகளுக்கு மேலாக போர் நீடித்து வருகிறது.

காசா போருக்கு எதிராக ஏமனில் செயற்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தொடர்ந்து இஸ்ரேலைத் தாக்கி வருகின்றனர்.

நேற்று முன்தினம் இஸ்ரேலின் 2 ஆவது பெரிய நகரமாகத் திகழ்ந்து வரும் ... விமான நிலையம் அருகே ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏமனில் இருந்து ஏவு கணை மூலம் தாக்குதல் நடத்தினார்கள்.

போர் தொடங்கிய பிறகு இஸ்ரேல் விமான நிலை யம் மீது அவர்கள் முதல் முறையாக இந்தத் தாக்கு தலை நடத்தி உள்ள னர்.

இதில் சிலர் காயம் அடைந்ததாகத் தகவல்கள் வெளியாகி இருக்கிறது. விமானப் பயணிகள் மத் தியிலும் பீதி ஏற்பட்டது. ஹவுதி கிளர்ச்சியாளர்களின் இந்தத் தாக்குதல் இஸ்ரே லுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

இது தொடர்பாக இஸ் ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வெளியிட்ட வீடியோவில் கூறியதாவது,

நாங்கள் கடந்த காலத் தில் அவர்களுக்கு எதிராக அமெரிக்காவுடன் இணைந்து செயற்பட்டோம்.

எதிர்காலத்திலும் செயற்ப டுவோம். இனி ஒருமுறை தாக்குதல் நடத்திவிட்டு ஓயமாட்டோம், தொடர் தாக்குதல் நடத்துவோம்.

நாங்கள் 2 பணிகளில் கவனம் செலுத்துகிறோம். ஒன்று ஹமாசை அழிப்பது. மற்றொன்று அவர்களிடம் இருந்து பணயக்கைதி களைப் பத்திரமாக மீட்பது.

இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

மேலும் இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அமெ ரிக்கா மற்றும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் தக்க பதிலடி கொடுப்போம் என ஹவுதி அமைப்பும் தெரி வித்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுங்கச் சட்டங்களை மீறியோரின் பெயர்களை பகிரங்கப்படுத்தத் திட்டம்

## சுங்கத் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

சுங்கச் சட்டங்களை மீறியதாகக் கண்டறியப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்களைப் பகிரங்கப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இலங்கை சுங்கத்தின் அதிகாரப்பூர்வ இணையத் தளத்தில் பெயர்கள் வெளியிடப்படும்.

இந்த நடவடிக்கை, மோசடி நடைமுறைகளைத் தடுப்பதையும் இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களிடையே தன்னார்வ இணக்கத்தை ஊக்குவிப்பதையும் நோக்கமாக உள்ளது என சுங்கப் பேச்சாளரும் கூடுதல் சுங்க பணிப்பாளருமான அருட்கோட தெரிவித்தார்.

இது நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் சட்டவிரோதமாகப் பொருட்கள் கொண்டு செல்வதைக் குறைக்க உதவும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தப் புதிய முயற்சி ஜூன் 2025 முதல் அமுலுக்கு வருகிறது.

மேலும் பொதுமக்கள் www.customs.gov.lk என்ற அதிகாரபூர்வ சுங்க வலைத்தளம் மூலம் குற்றவாளிகளின் பட்டியலை அணுகலாம். (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1997 - RC
நட்சத்திரம்: அனுசம்
கி.பா-10 1/2
உயரம்: 6'
தகைமை/தொழில்: BSc,Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/15402

பிறப்பு: 1984-இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா-17
உயரம்: 5'5"
தகைமை/தொழில்-A/L, Contruction
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15403

பிறப்பு: 1992-இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: Diploma Course, HR Manager
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15404

பிறப்பு: 1992- இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா-23
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L,PVT
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15406

பிறப்பு: 1990- இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா-59
8இல் செவ்
உயரம்: 6"
தகைமை/தொழில்: NCAT,Contruction
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15408

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1996-இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
8இல் செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L. கணனி உதவியாளர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/15401

பிறப்பு-1998- இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா-20
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, Demo
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/15405

பிறப்பு: 1990-இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Degree, PHD, Researcher (Singapore)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15407

பிறப்பு: 2001-இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா-16
உயரம்: 5'2"
தகைமை/தொழில் -A/L,Manager(pvt)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/15413

பிறப்பு: 1998-இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா-80
உயரம்: 5'6"
தகைமை/தொழில் - HND(IT),BSc
எதிர்பார்ப்பு: பட்டதாரி, வெளிநாடு
தொ.இ: G/15416

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 367



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# சூதாட்டம்!

ஒருவர் குதிரைப்பந்தயத்திற்குப் போனார். பணம் கட்டினார் தோற்றுப் போனார். மறுபடியும் பணம் கட்டினார் தோற்றுப் போனார். அடுத்த தடவையும் பணம் கட்டும் போது அவரைத் தடுத்துக் கேட்டேன். ஏன் சேர் ஏற்கனவே விட்டது போதாதா? என்றேன். விட்டதை எல்லாம் மொத்தமாக எடுக்க பணம் கட்டுகிறேன் என்றார்.

இவரைத் திருத்துவது மிகவும் கஷ்டம். இது ஒரு மனநோய். மனநோய்களிலே பல வகை உண்டு. மனநோய்கள் பிரிவு அட்டவணையில் அவதியுறும் நோய் எனும் தலைப்பில் வருகிறது.

சூதாட்டம் இரண்டு வகைப்படும் என்று சொல்கிறார்கள் உளவியல் நிபுணர்கள். நண்பர்களுடன் சேர்ந்து மகிழ்ச்சியும் கிளர்ச்சியும் அடைவதற்காக ஈடுபடுவது. பிரச்சினைகளைத் தீர்ப்பதுவே ஒரு ஆர்வம். கேளிக்கைக்காக கொஞ்சம் விட்டுப் பிடிப்பது மனிதனுடைய அடி மனதிலே உள்ள விபரீத பிணையச் சுபாவம் - இதெல்லாம் அதுக்குக் காரணம்.

இன்னொரு வகை எப்படி என்றால், சூதாட்டத்திலே ஈடுபட்டு ஒரு கட்டாய நிலைமைக்கு ஆளாகிவிடுறது. ஈடுபடு என்று மனது ஒரு வெறித் தன்மையைத் தூண்டிக் கொண்டே இருக்கும்.

இப்படிப்பட்டவர்களுக்கு நாம் தோற்றுக்கொண்டே இருக்கிறோம் என்று தெரியும். அப்படி இருந்தும் சூதாடுவார்கள். இதற்குக் காரணம் சூதாடியின் பகற்கனவு என்கிறார்கள் நிபுணர்கள். இந்த நிலைமைக்கு கட்டாய சூதாட்டம் நிர்ப்பந்த சூதாட்டம் என்று பெயர்.

இப்படிப்பட்ட ஆசாமி, இருப்பதை விட்டுவிடுவான். கடன் வாங்குவான். இருந்தாலும் என்றைக்காவது ஒரு நாள் ஜெயித்துவிடுவேன் என்று சொல்லிக்கொண்டிருப்பான். ஒரு நம்பிக்கைச் சுடர் அவனிடம் எரிந்துகொண்டிருக்கும். இவனை மனநோயாளி என்று சொல்லிவிட முடியாது. என்ன காரணம் என்றால் இது மாதிரி ஆட்களிடம் மனப் போராட்டம், கவலை, பதற்றமோ இருப்பதில்லை. சில விசேடமான குணங்கள் இவர்களிடம் உண்டு. எதிர்ப்புணர்ச்சி, சிறுபிள்ளைத்தனம் சட்டதிட்டங்களையும் சம்பிரதாயங்களையும் உடைத்தெரியாத மனப்போக்கும், பொறுப்பில்லாத தன்மை, நெறி தவறி நடக்கிறது. எல்லாம் இவர்களிடம் உண்டு. ஆனால் வெளிப் பார்வைக்கு சிநேகமாகவும் இருப்பதாக காட்டிக்கொள்வார்கள்.

ஆதாயம், சுயலாபம் கருதியே பழகுவார்கள். இவர்கள் கேட்கும் போது நாம் பணம் குடுக்கவில்லையே என்று வைத்துக்கொள்ளுங்கள். நம்மைக் கைவிட்டு விடுவார்கள். நம் மேலே பழி சுமத்தவும் தயங்க மாட்டார்கள். தங்களுடைய சூதாட்ட நடவடிக்கைகளுக்குச் சாதகமான காரணங்களை சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஒரே நாளில் இழந்ததையெல்லாம் மீட்டு இலட்சாதிபதியாகிறேனா இல்லையா பார் என்பார்கள்.

தோற்றுப்போவதை ஒரு படிப்பினையாக எடுப்பதே இல்லை. தோற்றுப்போவது இவர்களுக்கு ஒரு அலாதியான சுகம்.

தனக்குத்தானே துன்பத்தை வரவழைத்துக்கொண்டு இன்பம் அடைவதற்கு தன்வதை சுகம் masochist என்று பெயர். இவர்கள் எல்லாம் அந்த ரகம்! சில பேர் எப்படித் தெரியுமா? மந்திர எண்ணங்களை வரவழைப்பது.

சூதாட்டத்தில் கையாடல் செய்வது. அடுத்தவர்களிடம் இருந்து திருடுவது. இந்த மந்திர எண்ணம் தீவிரமானது என்றால் ஒரு மாதிரியாகப் பேச ஆரம்பித்துவிடுவார்கள். தோல்விதான் வெற்றிக்கு முதற்படி என்பார்கள்.

தன்னாலே படைக்காய்களையும் குதிரை ஓட்டிகளையும் கட்டுப்படுத்த முடியும் என்ற பித்து நிலைமைக்கு தள்ளப்படுவார்கள். சில சூதாடிகளை ஆராய்ந்து பார்த்ததிலே என்ன தெரிய வந்தது தெரியுமா?

அவர்களெல்லாம் குழந்தைப் பருவத்திலே அன்புக்காக ஏங்கியவர்கள். புறக்கணிக்கப்பட்டவர்கள்.

உதவிகளைப் பெற முடியாதவர்கள். இப்படி இருந்திருக்கிறார்கள். இவர்கள் வளர வளர மற்றவர்கள் சௌகரியம் பற்றி அக்கறை இல்லாதவர்களாயிடுவார்கள்.

அதிஷ்ட தேவதை தன்னோடு இருக்கிறார்கள் என்கிற அசையாத நம்பிக்கை இவர்களுக்கு. இவர்களைத் திருத்துவது மிகவும் கஷ்டம். அதனாலே பந்தயம் - சூதாட்டம் போன்ற விடயங்களை விட்டு விலகியே இருப்பதுதான் நமக்கு நல்லது என்று ஒரு ஆள் சொன்னான்.

என் குதிரை வேகமாக ஓடுவதற்கு என்ன வழி என்று கால்நடை மருத்துவரிடம் கேட்டேன்.

அவர் ஒரு போத்தல் நிறைய மாத்திரைகளைக் கொடுத்து தினம் இரண்டு மாத்திரை வீதமாக கொடுக்கச் சொன்னார்.

முதல் நாள் இரண்டு மாத்திரையைக் கொடுத்தேன். கொடுத்துவிட்டு அதன் மேல் ஏறி உட்காரப் போனேன். அவ்வளவுதான் அதுக்குள்ளே அது அம்பு மாதிரிப் பாய்ந்து ஓடிப் போய்விட்டது என்றான்.

அடடா அதன்பிறகு நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்டான். மீதி மாத்திரைகள் முழுவதையும் முழுங்கிவிட்டு அதைத் துரத்திப் பிடித்தேன் என்றான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லை ஆதீன குரு முதல்வர் பரிபூரணம். ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயத்தில் இன்று திருவாசகம் முற்றோதல் பிரார்த்தனையும் மாகேஸ்வர பூசையும்

**மாணிக்கவாசகர் சுவாமிகள் துதி**

நிறைந்த பரிபூரணமாய் நிற்குணமாய்
நிர்மலமாய் நித்த னாகித்
துறந்த மன முடையோற்குத் துரியனுமாய்
அத்தனுமாய்ச் சோதியாகிக்
கறந்தமுலைப் பாலாகிப் பாலிலுள்ள
ருசிகாட்டுங் கர்த்தனாகிச்
சிறந்தகுரு மாணிக்கச் சுவாமிகள்
எம் முளத்திற் றொழுதல் செய்வோம்.

உள்ளிருந்து நெஞ்சே! உலவுஞ் சிவகுருவை
வெள்ளெருக்கின் பூச்சூடும் வேணியனை- உள்ளே
மனமுருகப் பார்த்தால் மலை சிலையாகச் சென்றால்
உனதறிவால் பார்த்து நீ ஓது.

(பட்டினத்தார்)

இறைவனை தன் இருதயத்திற்கு உள்ளேயே இருத்தி, அந்த இறைவனோடு இரண்டறக் கலக்கும் எல்லையில்லா ஆனந்தமான பேரானந்தமான நிலை அடைவதற்கு வழிகாட்டுவதாகும். இந்த வழியில் தமிழ் நாட்டுச் சித்தர்கள், அறிவுரைகளையும், அறநெறிகளையும் பாடல்களாக வழங்கியுள்ளார்கள். இந்த வழியில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் இரண்டாவது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரியார் யாழ்ப்பாணம் நல்லூரில் தனது சமய நெறிகளை இளம் பராயத்தில் பல வழிகளில் செய்தவர்.

முன்னர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் நல்லூர் முருகன் திருவிழாக்காலத்திலும் மார்கழித் திருவெம்பா காலத்திலும் பல தொகையான சிறுவர்கள், பெரியவர்களுமாக திருமுறைகள் ஓதி வருவது ஓர் சிறப்பும் நம் சந்ததிக்கு வழி காட்டியாகவும் இருந்தார்.

வடக்கில் உள்ள பல ஆலயங்களிலும் வேறு சமய நிகழ்ச்சிகளிலும் ஆசி கூறி வருவது ஓர் சிறப்பாகும். அகில இலங்கைத் திருமுறை மன்றம் ஆதின முதலாவது சமாதி மண்டபத்தில் 25 வருடங்களுக்கு முன்னர் நல்லூர் முருகன் திருவிழா 25 நாட்களும் அருண கிரிநாதர் திருப்புகழ் முழுவதும் ஓதினதும், அதன் அருளால் அருணகிரிநாதர் விக்கிரகம் அமைந்தது நாம் தற்போது திருப்புகழ் குருநாகர் தரிசனம் கிடைத்துள்ளது.

காரைநகர் மாணிக்கவாசகர் மடாலயம் பல நிகழ்ச்சிகளாகிய அற்புதத் திருப்பதிகம் நூல் வெளியீடு, 75 ஆவது மடாலயப் பூர்த்தி வெள்ளிவிழா மற்றும் பல நிகழ்ச்சிகளிலும் கலந்து உபசரித்து ஆசி உரை செய்ததும். மணிவாசகர் விழாவில் கடந்த பல வருடங்கள் ஆரம்ப நிகழ்வுகளில் ஆசியுரையும். காரைநகர் அனைத்து ஆலயங்கள் கும்பிஷேக நிகழ்ச்சிகளில் கலந்து ஆசியுரை சமயம், ஆதினம் திருநீற்றுப் பொழிவும் ஒன்று சேர்ந்த திரு அருளையும் நம் ஈழத்திருநாட்டில் சைவத்திற்கும், தமிழிற்கும், ஆன்மிகத்திற்கும் வழிகாட்டியாக இருந்த முதல்வர் தேக வியோகம் அடைந்தார் என்பது சைவசமய அடியார்களுக்கு பட்டினத்தார் ( கோயில் திரு அகவல்)

நினைமின் மனனே! நினைமின் மனனே
சிவபெருமானைச் செம்பொனம்
நினைமின் மனனே! நினைமின் மனனே!
"அம்பலத் தரசே அடைக்கலம் உனக்கே"

**ஞானக்கோவை என வழங்கும் சித்தர் பாடல்கள் ஓதிப் பிரார்த்திப்போம்.**

பிணமெனப் படுத்தியான் புறப்படும் பொழுதுநின்
அடிமலர்க் கமலத்துக்கு அபயம்நின் அடைக்கலம்
வெளியிடை உரும்இடி இடித்தென வெறித்தெழுங்
கடுநடை வெள்விடைக் கடவுள்நின் அடைக்கலம்
இமையா நாட்டத்து இறையே! அடைக்கலம்

பட்டினத்தார்- பகுதி-45

ஈன்ற வாசலுக்கே இரங்கி எண்ணிறந்து போவீர்காள்
கான்ற வாழை மொட்டலர்ந்த காரணம் அறிகிலீர்
நான்ற வாசலைத் திறந்து நாடி நோக்க வல்லிரேல்
தோன்ற மாயை விட்டொழிந்து சோதி வந்து தோன்றுமே

சிவவாக்கியர்-66

நாவினூல் அழிந்ததும் நலம் குலம் அழிந்ததும்
மேவு தேர் அழிந்ததும் விசாரமும் குறைந்ததும்
பாவிகாள் இதென்ன மாயம் வாமநாடு பூசலாய்
ஆவியார் அடங்கு நாளில்
ஐவரும் அடங்குவார்!

சிவவாக்கியர்-112

பாபஞ்செய் யாதிரு மனமே- நாளைக்
கோபஞ்செய் தே யமன் கொண்டோடிப் போவான்

ஐந்துபேர் சூழ்ந்திடுங் காடு- இந்த
ஐவர்க்கும் ஐவர் அடைந்திடும்- நாடு
முந்தி வருந்தி நீ தேடு- அந்த
மூலம் அறிந்திடவா முத்தி வீடு

பாபஞ்-13

சிவமன்றி வேறே வேண்டாதே-யார்க்குந்
தீங்கான சண்டையைச் சிறக்கத் தூண்டாதே!
தவநிலை விட்டுத் தாண்டாதே; நல்ல
சன்மார்க்கமில்லாத நூலை வேண்டாதே.

பாபஞ்-26

நல்லை முதலாவது முதல்வர் திருப்பாதையில் இன்றுவரையும் இரண்டவதாக முதல்வர் சிவபூமி இலங்கையில் சைவ மக்களின் அறநெறியிலும் வழி வகுத்து அருள் பொழியும் முதல்வர் அமைய நல்லைக் கந்தனையும், ஈழத்துச் சிதம்பரத்தானையும், திருவாசகமும், திருப்புகழும் ஓதிப் பிரார்த்திப்போம்.

**குருஞான சம்பந்த சுவாமிகள்- வாக்கு**

ஒருகோடி ஆகமங்கள் எல்லாம் உணர்ந்தும்
பெருகுதவஞ் சித்தியெல்லாம் பெற்றும்-குருவருளால்
வைத்த படியிருக்க மாட்டாது மாந்தர்க்குச்
சித்தசல னம்மார் தினம்

வந்த பொருளாசை மண்ணாசை பெண்ணாசை
இந்த வகை ஆசையெலாம் என் மனத்தில்- வந்தினிச்
சேராமல் வாழ நினைகண்டாய் தென் கூடற்
பேராத சொக்கநா தா!

முத்திபேறு மென்னெஞ்சு மூர்கருடனே யிணங்கிச்
சித்ததந் தழும்பிச் சிதறாமல்-முத்தனாம்
பட்டினத்தார் சாட்சி. பகுத்தறித லிந்நூலைத்
தொட்டவர்க்கு முண்டார்ஞ் சுகம்
சிவானந்த பேதம்

க.கு.க சிவபாலன், போசகர்: காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், மாணிக்கவாசகர் மடாலயம்.
பொருளாளர் : அகில இலங்கைத் திருமுறை மன்றம்
ஆறாம் திருவிழா உபயகாரர்: அருள்மிகு திக்கரைமுருகன் ஆலயம்.



(சி-2898)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3320

### நிலோசி

குழந்தையை அம்மா நீண்டநேரம்
திட்டிக் கொண்டிருந்தால்
அது குழந்தையை அல்ல என
புரிந்து கொள்பவனே புத்திசாலி கணவன்



### வைஸ்ணவி

நமக்கு தெரிஞ்ச இங்கிலீஷ்
வார்த்தைகள எல்லாத்தையும்
வரிசையா எழுதி பாக்குறதுக்கு
கிடைக்கிற ஒரே ஒரு சந்தர்ப்பம்
இங்கிலீஷ் பரீட்சை



### மெய்யழகன்

நல்லா வேலை பார்த்தா சம்பளத்தை
கூட்டுவாங்கன்னு நினைச்சுக் கொண்டு
இருந்தன்..
அப்புறம் தான்
தெரிஞ்சுது...
வேலையை
மட்டும் தான்
இவனுங்க இன்னும்,
இன்னும் கூட்டுவானுங்கன்னு...



### துர்க்கா

வாழ்க்கை ல அடிபட்டா தான்'
முன்னுக்கு வர முடியும் அண்னே...
இதுவரைக்கும் பட்ட அடிக்கும் நாம
இப்போ அம்பானியாலாடா
ஆயிருக்க வேனும்...



### விதுஷன்

பொண்டாட்டிக்கும் சூரியனுக்கும் ஒரு
பொருத்தமுண்டு...
எப்படின்னா... இரண்டையுமே மூன்று நொடிக்கு
மேல மொறச்சு பார்க்க முடியாது....



### நரேஷ்

மனசுக்கு கஷ்டமா இருக்குன்னு சொன்னா
ஆளூ ஆளுக்கு அட்வைஸ் பண்ண வருவாங்க



கொஞ்சம் பணத்துக்கு கஷ்டமா இருக்குனு
சொல்லி பாருங்க எல்லாரும் ஓடிப் போயிருவாங்க

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 764





பின் வைத்த காலை மறுபடி முன் வைத்து நடந்து செல்லத் தொடங்கினான். கீழே சமதரை என்றாலும் முண்டும் முரடுமாக இருந்தது. பாறையைக் குடைந்து எடுத்து அந்தப் பாதாள வழியை அமைத்திருக்க வேண்டும். அந்த வழி எங்கே போய்ச்சேரும் என்பது அவன் மனத்தில் ஓர் உத்தேசம் தோன்றியிருந்தது. அநேகமாக அது கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்குள் போய் முடிய வேண்டும். அந்த மாளிகை எங்கே போய் முடிகிறதோ என்னமோ! ஒருவேளை பொக்கிஷ அறையில் முடியலாம் அல்லது அரண்மனைப் பெண்டிர்கள் வாசம் செய்யும் அந்தப்புரத்தில் முடியலாம்.

என்ன சதி செய்கிறார்கள்? இதையெல்லாம் அந்த வீரவைஷ்ணவன் கவனித்துக் கொண்டிருப்பான். நாம் இங்கே மூச்சு முட்டும்படி, உடம்பில் வியர்த்துக் கொட்டும்படி நின்று காத்திருப்பதைக் காட்டிலும் மேலே கொஞ்சத் தூரம் போய்ப் பார்ப்பதே நல்லது. துணிந்து இறங்கியது இறங்கியாகி விட்டது. இந்தச் சுரங்க வழி எங்கேதான் போகிறது என்பதைக் கண்டுபிடிப்பது மேல் அல்லவா?"

இவ்வாறு முடிவு கட்டிக் கொண்டு வந்தியத்தேவன்

அரசர்களும் சிற்றரசர்களும் வசிக்கும் அரண்மனைகளிலிருந்து அத்தகைய சுரங்கப்பாதைகள் இருக்கும் என்பது அவன் அறிந்த விடயந்தான். ஏதாவது பேரபாயம் நேரும் காலங்களில் அரண்மனையிலிருந்து ஓடித் தப்பிக்க வேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தால், அத்தகைய பாதைகளை உபயோகிப்பார்கள். அரண்மனைப் பெண்டிரை அப்புறப்படுத்துவது அவசியமாதலால் அத்தகைய பாதைகள் அந்தப்புரத்தில் சாதாரணமாக முடிவதுண்டு. முக்கியமான பொக்கிஷங்களை எடுத்துக் கொண்டு போவதும் அவசியமாதலால் பொக்கிஷ நிலவறை மூலமாகவும் அந்த வழிகள் போவது வழக்கம்.

இந்த வழி எங்கே போய் முடிகிறதோ, என்னமோ? இடும்பன்காரி இவ் வழியாக வந்து வெளியேறியிருப்பதால், அநேகமாகப் பொக்கிஷ அறையில் தான் போய் முடியும். பெரிய பழுவேட்டரையரின் பொக்கிஷங்களை அவர் அறியாமல் இளைய ராணி மூலம் இச்சதிகாரர்கள் சூறையிடுவது போல், சம்புவரையரின் பொக்கிஷத்தையும் கொள்ளையிடத் திட்டம் போட்டிருக்கிறார்கள் போலும்! ஆதித்தகரிகாலரும் மற்றவர்களும் விருந்தாளிகளாக வரவிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இவர்கள் இம்மாதிரி காரியத்தில் பிரவேசிப்பதன் காரணம் என்ன? ஒருவேளை வேறு நோக்கம் ஏதேனும் இருக்க முடியுமா? திருப்புறம்பயம் பள்ளிப்படைக் காட்டில் பார்த்ததும் கேட்டதும் வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தன.

பழுவூர் ராணியிடம் இருந்த மீன் அடையாளம் பொறித்த நீண்ட வாள் அவன் மனக்கண் முன்னே வந்து ஒரு கணம் ஜொலித்தது. வந்தியத்தேவனுக்கு உடம்பு சிலிர்த்தது. பொக்கிஷத்தைக் கொள்ளையிடுவதைக் காட்டிலும் இன்னும் பயங்கரமான நோக்கம் இவர்கள் வைத்திருந்தாலும் வைத்திருக்கலாம். இந்த வழி எங்கே போகிறதென்பதை நிச்சயமாகத் தெரிந்து கொண்டால் அவர்களுடைய கொடிய நோக்கம் நிறைவேறாமல் தடுப்பதற்குப் பயன்பட்டாலும் படலாம்.

சுரங்க வழியில் நடக்க ஆரம்பித்து உண்மையில் சில நிமிடங்கள் தான் ஆயிற்று ஆனாலும் இருண்ட வழியாயிருந்தபடியால் நெடுநேரமாகத் தோன்றியது.

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்

# பூனை பிரபு



(நேற்றைய தொடர்ச்சி)

முயல் நடுங்கிக் கொண்டே நரியின் வீட்டை அடைந்தது. நீண்ட நேரம் வெளியிலேயே காத்திருந்தது.

வெளியே வந்த நரி முயலைப் பார்த்து வியப்பு அடைந்தது. "பன்றி, ஓநாய், கரடி மூன்றும் என்னை இங்கே அனுப்பின. நால்வரும் சேர்ந்து விருந்திற்கு ஏற்பாடு செய்துள்ளோம். உங்களுக்காகவே இந்த விருந்து நீங்களும் பூனை பிரபுவும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்" என்றது முயல்.

"நல்லது. நான் விருந்திற்கு வருகிறேன். பூனை பிரபுவும் என்னுடன் வருவார். நாங்கள் வரும் போது நீங்கள் நால்வரும் எங்காவது ஒழிந்து கொள்ளுங்கள் பூனை பிரபு உங்களைப் பார்த்தால் நீங்கள் செத்தீர்கள். விருந்து எங்கே நடக்கிறது?" என்று கேட்டது நரி. இடத்தைச் சொல்லி விட்டு ஓட்டம் பிடித்தது முயல். தன் நண்பர்களைச் சந்தித்து நடந்ததைச் சொன்னது அது. பயந்து போன நான்கும் என்ன செய்வது என்று சிந்தித்தன.

"நான் அந்த மரத்தில் ஏறிக் கொள்கிறேன்" என்றது கரடி" அந்தப் புதரில் நான் ஒழிந்து கொள்கிறேன் என்றது ஓநாய். உன் அருகிலேயே நானும் பதுங்கிக் கொள்கிறேன் என்றது முயல். அடர்ந்த அந்த மரங்களுக்குப் பின்னால் நான் மறைந்து கொள்கிறேன் என்றது பன்றி.

பூனை பிரபுவும் நரியும் வரும் ஓசை கேட்டது. நான்கும் பதுங்கிக் கொண்டன. பலவிதமான உணவுப் பொருட்களைப் பார்த்தது பூனை. அதற்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. "மியாவ் மியாவ்" என்று கத்திக் கொண்டே சாப்பிடத் தொடங்கியது.

புதரில் இருந்த ஓநாய், "எவ்வளவு பயங்கரமான விலங்கு? என்ன கொடூரமான குரல்? சாப்பிடும் வேகத்தைப் பார்த்தால் நம் விருந்து அதற்குப் போதாது. நம்மையும் கொன்று தின்னும் போல இருக்கிறது" என்றது.

"ஆமாம்" என்று நடுங்கிக் கொண்டே சொன்னது முயல். மரத்தில் இருந்த கரடியும் மறைந்து இருந்த பன்றியும் நடுங்கின. பூனை விருந்தை வயிறார உண்டது. மேடையின் மேல் படுத்துத் தூங்கத் தொடங்கியது.

மரத்தின் மறைவில் பதுங்கி இருந்த பன்றியின் வாலைக் கொசு ஒன்று கடித்தது. உடனே பன்றி தன் வாலை அசைத்தது. சத்தம் கேட்டு விழித்தது பூனை. பன்றியின் வாலை எலி என்று தவறாக நினைத்தது அது. "மாட்டிக் கொண்டாயா?" என்று கத்திக் கொண்டே எலியைப் பிடிக்கப் பாய்ந்தது. நேராகப் பன்றியின் முகத்தில் போய் மோதியது அது.

எதிர்பாராமல் நடந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்த பன்றி அங்கிருந்து "தப்பித்தேன் பிழைத்தேன்" என்று கத்திக் கொண்டே ஓட்டம் பிடித்தது.

பன்றியைக் கண்டு பயந்த பூனை ஒரே பாய்ச்சலில் அருகில் இருந்த மரத்தில் ஏறியது. அங்கிருந்த கரடி தன்னைத்தான் பூனை பிரபு கொல்ல வருகிறார் என்று பயந்தது. விரைந்து மரத்தின் உச்சிக் கிளைக்குச் சென்றது. அதன் எடை தாங்காமல் கிளை முறிந்து புதரில் மறைந்திருந்த ஓநாயின் மேல் விழுந்தது அது.

அலறி அடித்துக் கொண்டு ஓநாயும் ஓட்டம் பிடித்தது. முயலும் அதைத் தொடர்ந்து ஓடியது. வலியைத் தாங்கிக் கொண்டு "தப்பித்தோம் பிழைத்தோம்" என்று கரடியும் ஓடியது.

நீண்ட நேரத்திற்குப் பிறகு நான்கும் சந்தித்தன. "பூனை பிரபு பார்ப்பதற்குச் சிறியவராக இருக்கிறார். நம் நால்வரையும் கொன்று தின்றிருப்பார். நல்ல வேளை தப்பித்தோம்" என்றது கரடி. மற்ற மூன்றும் "ஆமாம்" என்றன. அதன் பிறகு பூனை பிரபுவின் வழிக்கே அவை செல்லவில்லை. (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் வாய்ப்புகளை அதிகமாக பயன்படுத்திக் கொள்ளும் போது நம் திறமை மெருகேருகிறது.

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மக்கள் வழங்கும் தீர்ப்பு மகேசன் தீர்ப்பாகும்

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இன்று நடைபெறுகிறது. வாக்களிப்பதன் மூலம் மக்கள் தங்களின் தீர்ப்பை வழங்கவுள்ளனர்.

மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

ஆக, இன்று நடைபெறுகின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் வழங்குகின்ற தீர்ப்பு என்பது கடவுளால் வழங்கப்படுகின்ற தீர்ப்பாகக் கருதப்பட வேண்டியது.

அதேநேரம் மக்கள் தமக்கான வாக்களிக்கும் உரிமையை நிச்சயம் நிறைவேற்றுவர் என நம்பலாம்.

ஆம், தேர்தல் என்பது மிகப் பெருந்தொகையான நிதிச் செலவுடன் ஏகப்பட்ட மனித மற்றும் பௌதிக வளங்களைப் பயன்படுத்தி நடத்தப்படுவதாகும்.

இவ்வாறு பெரும் செலவில் தேர்தல் நடத்தப்படுவதற்குக் காரணம், மக்களால் மக்களுக்கான ஆட்சி தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதாகும்.

இருந்தும் ஒரு பகுதி மக்கள் வாக்களிப்பதில் ஆர்வமற்றவர்களாக இருப்பதைக் காண முடிகிறது.

அதேநேரம் ஜனநாயகம் என்று வந்துவிட்டால், தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் தெரிவுகள் நிர்ணயிக்கப்படும்.

ஆக, நாம் வாக்களிக்காமல், ஒதுங்கிக் கொண்டாலும் தேர்தல் முடிவுகள் வெளிவரவே செய்யும்.

ஆக, வாக்களிக்காமல் ஒதுங்குவதன் மூலம் நியாயமான தெரிவுகளுக்கான வாய்ப்புகள் இல்லாமல் போகின்ற துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படலாம்.

எனவே என்னதான் கருத்து வேற்றுமைகள், வெறுப்புகள், எதிர்ப்புகள் இருந்தாலும் வாக்களித்தல் என்பது தவிர்க்கப்படக்கூடாத ஒன்று.

ஆகையால் இன்று நடைபெறுகின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்களிக்கின்ற உரிமை உடைய அனைத்துப் பொது மக்களும் வாக்களிக்க வேண்டும்.

அத்துடன் அளிக்கப்படுகின்ற வாக்குகளை ஏனோதானோ என்றில்லாமல் மிகவும் நிதானித்து வாக்களிப்பதுதான் மிகவும் முக்கியமானது.

இவை ஒருபுறமிருக்க, ஏலவே நாம் கூறியதுபோல, இன்று நடைபெறுகின்ற தேர்தல் முடிவுகள் மிக உயர்ந்த செய்தியை இந்த நாட்டுக்குத் தெரிவிப்பதாக இருக்கும்.

ஆகையால் தேர்தல் முடிவுகள் மக்கள் போதிக்கின்ற பாடங்கள்.

அதாவது, பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிவதற்குத் தேர்தல் முடிவுகளே மிக உன்னதமான சான்றாதாரம்.

ஆகையால் வெற்றி தோல்வி என்பதற்கு அப்பால், மக்களின் மனநிலை எவ்வாறாக உள்ளது என்பதைத் தயவுசெய்து தேர்தல் முடிவுகளில் இருந்து ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ள வேண்டும்.

# உள்ளூராட்சித் தேர்தலுக்குத் தயாரானது வடக்கு; மாவட்ட ரீதியில் சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

நாடளாவிய ரீதியில் சுமார் 7 ஆண்டுகளுக்குப் பின்னர் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் வடக்கு மாகாணத்திலும் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் மாவட்ட ரீதியில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

வட மாகாணத்தில் இம்முறை இரண்டு மாநகர சபைகள் நான்கு நகர சபைகள் 29 பிரதேச சபைகள் என 35 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இடம்பெறவுள்ளது. அந்த வகையில்,

### யாழ் மாவட்டத்தில்

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் ஒரு மாநகரசபை, 3 நகர சபைகள் மற்றும் 13 பிரதேச சபைகள் என 17 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இடம்பெறவுள்ளது.

குறித்த சபைகளில் உள்ள 243 வட்டாரங்களில் இருந்து உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 3 ஆயிரத்து 519 வேட்பாளர்கள் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களிலிருந்து போட்டியிடுகின்றனர். 517 வாக்களிப்பு நிலையங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

இதேநேரம் 4 இலட்சத்து 98 ஆயிரத்து 140 வாக்காளர்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

அத்துடன் தேர்தல் கடமைகளுக்காக 6 ஆயிரத்து 320 அதிகாரிகளும் ஆயிரத்து 48 பொலிஸ் உத்தியோகத்தர்களும் கடமையாற்றவுள்ளனர்.

இதேநேரம் யாழ் மாவட்டத்தில் 243 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது என யாழ் மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அதிகாரியுமான மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

### முல்லைத்தீவு மாவட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 291 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்ட செயலாளருமான அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, துணுக்காய் , மாந்தை கிழக்கு ஆகிய நான்கு பிரதேச சபைகளுக்கான தேர்தலாக இது அமைவதுடன் 41 வட்டாரங்களை உள்ளடக்கிக் காணப்படுகின்றது

மாவட்டத்தில் 137 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது .

274 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளதாகவும் 87 ஆயிரத்து 800 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் எனத் தெரிவித்தார்.

### கிளிநொச்சி மாவட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேச சபைகளுக்குமான தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட பதில் அரச அதிபர் எஸ்.முரளிதரன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 387 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். 108 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெறவுள்ளது. 40 வாக்கெண்ணும் நிலையங்களில் வாக்கெண்ணும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஆயிரத்து 450 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ளனர். மாற்றுவலுவுள்ளோருக்கான ஏற்பாடுகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்றார்.

### வவுனியா மாவட்டம்

வவுனியா மாவட்டத்தில் ஆயிரத்து 605 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ளனர் என்று மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமான பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியா மாவட்டத் தில் ஒரு மாநகர சபை மற்றும் நான்கு பிரதேச சபைகளுக்காக 103 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற்காக ஆயிரத்து 731 பேர் போட்டியிடவுள்ளனர். ஒரு இலட்சத்து 79 ஆயிரத்து 293 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். வவுனியா மாவட்டத்தில் 154 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

ஆயிரத்து 605 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ளனர். ஆயிரத்து 307 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர் என்றார்.

### மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்தில் 91 ஆயிரத்து 373 வாக்காளர்கள் இம்முறை வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். 5 உள்ளூராட்சி மன்றங்களில் இருந்தும் 88 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மன்னார் நகர சபையில் 18 உறுப்பினர்களும் மன்னார் பிரதேச சபையில் 23 உறுப்பினர்களும் நானாட்டான் பிரதேச சபையில் 19 உறுப்பினர்களும் முசலி பிரதேச சபையில் 19 உறுப்பினர்களும் மாந்தை மேற்கு பிரதேச சபையில் 24 உறுப்பினர்களும் உள்ளடங்கலாக கட்சி மற்றும் சுயேட்சைக் குழு சார்பாக 103 உறுப்பினர்கள் போட்டியிடுகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் 114 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என மன்னார் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி கனேகஸ்வரன் தெரிவித்தார்.

(ம-4,7,33,285,299)

# துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் உயிரிழப்பு

(கல்கிசை)

கல்கிசை கடற்கரை வீதியில் நேற்று திங்கட்கிழமை காலை நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார்.

களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் 09 மில்லிமீற்றர் ரகத் துப்பாக்கியால் இளைஞன் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொண்டிருந்தனர்.

தெஹிவளையைச் சேர்ந்த 19 வயதான இளைஞர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ம-7)

# மின்னல் தாக்கம் குறித்து அவதானமாக செயற்படுக

## எச்சரிக்கின்றது வளிமண்டலவியல் திணைக்களம்

(கொழும்பு)

பலத்த மின்னல் தாக்கங்கள் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி வடமத்திய மாகாணம் மற்றும் மாத்தளை, திருகோணமலை, வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் இடியுடன் கூடிய மழை வீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை, பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு–கேது பெயர்ச்சி பலன்கள்

## 26.04.2025–12.11.2026 வரை



இதுவரை உங்கள் இராசிக்கு 4ஆம் இடத்தில் அர்த்தாஸ் டம ராகுவாக சஞ்சரித்து வந்த ராகு பகவான் வெற்றிகள் ஸ்தானம் எனப்படும் 3ஆம் இடத்திற்கு வரப்போகிறார். அதே சமயம் கேது பகவான் உங்கள் ராசிக்கு 9ஆம் இடமான பிதுராஜ்ஜித் ஸ்தானத்திற்கு வருகிறார். சுமார் 1 1/2ஆண்டு காலம் அதே இடத்தில் ராகுவும், கேதுவும் சஞ்சரித்து உங்களுக்குரிய பலன்களை வழங்குவர்.

இந்த ராகு- கேது பெயர்ச்சி கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிக்கான அறிகுறி தென் படும். தம்பதியர் ஒற்றுமை பலப்படும். கலைத்துறையைச் சார்ந்தவர்களுக்கு கௌரவப் பதவி கிடைக்கும். வியாபாரம் இலாபத்தை கொடுக்கும்.

**சுய சாரத்தில் ராகு சஞ் சாரம் (1.11.2025 முதல் 9.7.2026 வரை)**

சதய நட்சத்திரக் காலில் தனது சுய சாரத்தில் சஞ்சரிக்கும் ராகு பகவான், மிகுந்த நன்மைகளை செய்வார். தொட்டது துலங்கும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். கொடுக்கல்-வாங்கல் சரியாகும். திட்டமிட்டு செலவு செய்வீர்கள். உறவுகளுக்குள் இருந்த பிரச் சினை அகலும். அதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். வருமான பற்றாக்குறை வில கும். உடல்நலக் குறைவு நீங்கி, உற்சாகம் பிறக்கும். வழக்குகள் சாதகமாக முடியும். வருங்காலம் பற்றிய பயம் நீங்கும். வாகன தொகை கைக்கு வந்து சேரும். பூமி வாங்கும் முயற்சியில் இருந்த சிக்கல்கள் அகலும். அலு வலகத்தில் வீடு, வாகனம் வாங்க கடன் கேட்டு விண் ணப்பித்திருந்தால் அது கிடைக் கும் வெளி நாட்டில் உள்ள நிறுவ னங்களில் இருந்து வேலைக் கான அழைப்புகள் வரும்.

**சுக்கிர சாரத்தில் கேது சஞ் சாரம் (28.6.2025 முதல் 5.3.2026 வரை)**

பூரம் நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்தில் கேது சஞ்ரிக்கும் பொழுது, பல நல்ல வாய்ப்புகள் இதுவரை எதிர்பார்த்துக் காத் திருந்த பதவி உயர்வு வந்து சேரும். திறமைக்குரிய அங் கீகாரம் கிடைக்கும், உங் களுக்கு கெடுபிடி தந்த மேல திகாரிகள் மாற்றப்பட லாம்.




**சனிப்பெயர்ச்சிக் காலம்**

6.3.2026 அன்று சனி பக வான், மீன ராசிக்குப் பெயர்ச்சி யாகிறார். உங்கள் ராசிக்கு அர்த்தாஷ்டமச் சனி தொடங் குகிறது. எனவே மனக்கவலை அதிகரிக்கும். பொருளாதார தட்டுப்பாடு, இனத்தார் பகை உருவாகும். எதையும் மனம் ஒன்றி செய்ய முடியாது. உடல் நலக் குறைபாடு ஏற்படும். பிள்ளைகளால் பிரச்சினை வரலாம். பெரிய மனிதர்களை பகைத்துக் கொள்ள வேண் டாம். நடக்கும் காரியங்கள் ஸ்தம்பித்து நிற்கலாம். இது ஒரு சோதனைக் காலமாகும். ஒவ் வொரு சனிக்கிழமையும் விரதம் இருந்து சனிகவசம்பாடி சனி பகவானை வழிபடுவது நல்லது.

## மூன்றாமிடத்தில் வரும் ராகு முன்னேற்றம் தான் இனி பாரு!

யின் பொழுதே அர்த்தாஷ்டம ராகு விலகுவதால் நன்மை ஏற்படும் என்றாலும் ஆயுள் காரகன் சனியோடு இணைந்து கேதுவின் பார்வை பெறுவதால் ஆரோக்கியத் தொல்லை அதிக ரிக்கும். அலைச்சலை குறைத் துக் கொள்வதோடு, ஆகாரத் திலும் கட்டுப்பாடு செலுத்த வேண்டும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு இது சோதனைக் காலம். கவனமாக செயற்படுங்கள்.

9இல் சஞ்சரிக்கும் கேதுவால் ஒளிமயமான எதிர்காலம் அமையும் என்றாலும் சொத்து பிரச்சினை மீண்டும் தலை தூக்கும். குடும்ப உறுப்பினர் களிடம் விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். மறைமுக எதிர்ப்பு, உறவினர் பகை அதிகரிக்கும். யாரையும் நம்பி எதையும் செய்ய முடியாது. மன வருத்த மும், வீண் விரயமும் உண் டாகும். நினைத்தது ஒன்றும், நடந்தது ஒன்றுமாக இருக்கும்.

**குரு சாரத்தில் ராகு சஞ் சாரம் (26.4.2025 முதல் 31.10.2025 வரை)**

பூரட்டாதி நட்சத்திரக் காலில் குரு சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, பொருளா தாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய முயற்சிகளில் வெற்றி யோகம் உண்டு.

**ஜோதிடக் கலாமணி சிவஸ்ரீ சிங்காரம்**

**செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சாரம் (10.7.2026 முதல் 12.11.2026 வரை)**

அவிட்ட நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் ராகு பக வான் சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகளின் மேல்படிப்பு சம் பந்தமாகவோ வெளிநாட்டு வேலை சம்பந்தமாகவோ எடுத்த முயற்சி வெற்றி பெறும். அடகு வைத்த நகைகளை மீட் பீர்கள். வீடு கட்டும் எண்ணம் நிறைவேறும். மாற்று இனத் தவரின் ஒத்துழைப்போடு கூட்டு முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். பொதுவாழ்வில் உள்ளவர்களின் பொறுப்புகளில் திடீர் மாற்றம் நிகழும். மாமன்- மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்பு மறையும். கரைந்த சேமிப்புக் களை ஈடுகட்டுவீர்கள்.

**சூரிய சாரத்தில் கேது சஞ் சாரம் (26.4.2025 முதல் 27.6.2025 வரை)**

உத்தரம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது நல்ல பலன்கள் இல்லம் தேடி வரும். நினைத்து பார்க் காத இன்ப நிகழ்வுகள் இல் லத்தில் நடைபெறும். பொறுப்புக் கள் செல்லி வரும் கொடுத்த கை நழுவிச் செல் லும் திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்டபடி செய்து முடிக்க இயலாது. பண நெருக்கடி ஏற் படும். புது முயற்சிகளில் தடை, தாமதம் வந்து அலைமோதும். எதிர்மறை சிந்தனை அதி கரிக்கும். நண்பர்களை நம்பி ஒப் படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே திரும்பி வரும். கூட்டாளிகள் உங்களை விட்டு விலக நேரிடும். கொடுக்கல்- வாங்கலில் ஏமாற்றத்தைச் சந் திப்பீர்கள். குடும்பத்தில் மூன்றாம் நபரின் தலையீட்டை அனுமதிக் காதீர்கள், பெற்றோர் உடல் நலனில் கவனம் தேவை. பொது வாழ்வில் இருப்பவர்கள் வீண் பழிக்கு ஆளாக நேரிடும். எதை யும் யோசித்து செய்ய வேண்டிய நேரம் இது.

**சுய சாரத்தில் கேது சஞ் சாரம் (6.3.2026 முதல் 12.11.2026 வரை)**

மகம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, அடிக்கடி வேலை மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருப் பவர்களுக்கு இப்பொழுது நல்ல வேலை கிடைக்கும். தொழிலுக் கான முதலீடு நண்பர்கள் மூலம் கிடைக்கப்பெறும் அலுவலகத்தில்

**குருப்பெயர்ச்சிக் காலம்**

ராகு - கேது பெயர்ச்சிக் காலத்தில் குருப்பெயர்ச்சி நிகழ்கிறது. 11.5.2025 அன்று குரு பகவான், மிதுன ராசிக்கு பெயர்ச்சியாகிறார். குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் திட்டமிட்ட காரியங் கள் சிறப்பாக நடைபெறும். கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுவீர்கள். குலதெய்வ பிரார்த்தனை நிறைவேறும், பொதுவாழ்வில் புதிய பொறுப்பு கள் கிடைக்கும். தனித்து தொழில் செய்ய முன்வரு வீர்கள். மாற்று கருத்துடை யோர் மனம் மாறுவர் கல்யாண கனவு நனவாகும். ஒக்டோபர் 8ஆம் திகதி குரு பகவான், அதி சாரமாக கடக ராசிக்கு பெயர்ச்சியாகிறார். இதன் விளைவாகப் புதிய சொத்து வாங்குவீர்கள். புகழ் மிக்க ஆலயங்களுக்குச் சென்று வரும் யோகம் உண்டு. உத்தி யோகத்தில் கேட்ட இடத்திற்கு மாறுதல் கிடைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இளம் குடும்பஸ்...

பட்டுள்ளார்.

மூன்று நாட்களாகக் குறித்த நபர் காணாமல் போயிருந்த நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் சடலத்தை நேரடியாகச் சென்று பார்வையிட்டதோடு சடலத்தை முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்று உடற்கூற்றுப் பரிசோதனை செய்த பின்னர் உறவினர்களிடம் கையளிக்க உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,4,299)

## 15 வயது...

உயிரிழந்துள்ளார்.

இதில் அரசடி வீதி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த, வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் தரம் 11 இல் கல்வி கற்கும் சசிதரன் கிஷானுஜன் (வயது-15) என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

மேற்படி மாணவன் முகம், கை, கால் ஆகியவை வீக்கம் அடைந்ததன் காரணமாக ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார்.

இறப்புக்கான காரணம் கண்டறியப்பட உடற்கூற்று மாதிரிகள் இரசாயனப் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7,4,33,60)

## யாழ்ப்பாணத்தில்...

பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

உடுவில் பிரதே செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/203 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேரும், ஜே/191 கிராம சேவகர் பிரிவில் 3 குடும்பத்தைச் சேர்ந்த 7 பேரும், சண்டிலிப்பாய் பிரதே செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/141 கிராம சேவகர் பிரிவில் 2 குடும்பத்தைச் சேர்ந்த 7 பேரும், ஜே/150 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 2 பேரும், சங்கானைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/180 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-7,4,33)

## தேர்தலை...

இதற்கமைய பொலிஸாரால் நடமாடும் கண்காணிப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்போது எவரேனும் சட்ட விரோதமான செயற்பாடுகளில் ஈடுபடுவார்களாயின் குறித்த நபரைக் கைது செய்து சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறினார்.

அத்துடன் அமைதிக் காலப்பகுதியில் தேர்தல் சட்டத்தை மீறி செயற்படும் நபர்களுக்கு எதிராகச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார். (ம-7,4)

## இலங்கை - வியட்...

தரப்புப் பேச்சுவார்த்தைகளைத்தொடர்ந்து இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் இணக்கப்பாட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டன.

இதன்போது வியட்நாம் சோசலிச குடியரசுக்கும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இடையே சுங்க விவகாரங்களில் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி தொடர்பாக உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

வியட்நாமின் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்கும் இலங்கையின் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சுக்கும் இடையிலான இயந்திர உற்பத்தி ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் வியட்நாம் விவசாய விஞ்ஞான நிறுவகத்திற்கும், இலங்கை விவசாயத் திணைக்களத்திற்கும் இடையிலான விவசாய ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டன.

மேலும் இலங்கையின் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனத்திற்கும் வியட்நாமின் இராஜதந்திர நிறுவகத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் வியட்நாம் வர்த்தக ஊக்குவிப்பு முகவர் நிறுவனத்திற்கும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. (ம-7,4)

## வாக்குச்சீட்டில்...

களும் செய்யப்பட்டுள்ளன. வாக்களிப்பு நிலையங்களுக்கு ஆளடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ஆகியவற்றில் ஒன்றை எடுத்து வரவேண்டும்.

வாக்களிப்புக்கான தங்களுடைய ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக, அலுவலக அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை பெறுவதற்காக விண்ணப்பம் செய்தமைக்கான பிரதி ஆகியவற்றை எடுத்து வர வேண்டாம்.

அத்துடன், வாக்குச்சீட்டில் கட்சிகளின் பெயர்களுக்கு எதிரே கட்சிகளின் சின்னங்களும் சுயேட்சைக் குழுக்களின் பெயர்களுக்கு எதிரே சுயேட்சைக் குழுக்களின் சின்னங்களும் இருக்கும். அதற்கு எதிராக வெற்றுக் கட்டம் இருக்கும். அதில் புள்ளடி இட வேண்டும்.

"வாக்குச்சீட்டில் எழுதவோ, சித்திரம் கீறவோ, கிறுக்கவோ, எண்ணங்களை எழுதவோ, பெயர்களை எழுதவோ வேண்டாம். புள்ளடி இடப்படாத எந்தவொரு வாக்குச்சீட்டும் நிராகரிக்கப்படும்" என்றார். (ம-7,4)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

## 11 மணி...

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்பு இன்று இடம் பெறவுள்ளது.

இந்த நிலையில் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் அறிவிப்பில், அனைத்து வங்கிகளும் காலை 8.30 மணிக்குத் திறக்கப்படும்.

அதன்படி இரண்டரை மணி நேரம் மாத்திரமே திறந்திருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,4)

## தேர்தல்...

யாலயத்திலுள்ள வாக்குச் சாவடியில் தேர்தல் கடமைக்காகச் சென்ற பெண் ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்று உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கிருஷாந்தி குமாரி தசநாயக்க (வயது-33) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் கலகெதர மினிகமுவவில் வசிப்பவராவார்.

திடீரென உடல்நிலையில் எற்பட்ட சுகவீனம் காரணமாக மாலை 5 மணியளவில் பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

பிரேதப் பரிசோதனைக்குப் பின்னரே மரணத்திற்கான காரணத்தை உறுதியாகக் கூற முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,4)

மஹஜன சம்பத
திகதி 2025.05.05
சீட்டிழுப்பு இலக்கம் 5822
A 7 8 9 3 5 3
அத சம்பத A 9 3 5 3
சீட்டிழுப்பு இலக்கம் 0397
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.05.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1852
U 04 14 41 81 U
22791

மெகா பவர்
திகதி 05/05/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2170
T 22 08 38 63 73

ஜய JAYA
திகதி 2025.05.05
சீட்டிழுப்பு இலக்கம் 090
J 1 8 4 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4064
சீட்டிழுப்பு திகதி 05.05.2025
E 22 45 50 61
E

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.05
சீட்டிழுப்பு இலக்கம் 1131
மிதுனம் 05 07 20 25 மிதுனம்
56488 25

உத்தியோகபூர்வ முடிவுகள்
05.05.2025 வெற்றி வாரம் 530
K 8 6 5 3 8 0
54867
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.36,720,373.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2796
சீட்டிழுப்பு திகதி 2025.05.05 தினம் திங்கட்கிழமை
30 37 51 79 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,252,285.60
DLB

சனிதா
திகதி 05.05.2025 வெற்றி வாரம் 4957
04 12 31 43 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,724,383.60
ரூ.100,000/- 68374
DLB

ஜயோதா Jayoda
திகதி 2025.05.05 வெற்றி வாரம் 2124
28 44 48 55 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 29,202,732.40
DLB

சீட்டிழுப்பு வாரம் 4508
சீட்டிழுப்பு திகதி 05.05.2025 தினம் திங்கட்கிழமை
28 35 45 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,065,692.00
186830
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 35 48 50 66 74
அடுத்த சுப்பர் ஜக்பொட்
1972
05.05.2025 திங்கட்கிழமை
DLB

திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2622
சீட்டிழுப்பு திகதி: 2025.05.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,252,811.20
ADA KOTIPATHI
44 47 52 63 S
790160
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

(C-2904)

0777-068-777
v2vacancies@gmail.com



## மில் வேலைக்கு ஆட்கள் தேவை

ஆண், பெண் இருபாலாரும்
சம்பளம் 1500/= தொடக்கம் 2500/=

நெல்லியடி

070 636 1356

(1106)



பாடசாலை அதிபர்களுக்கு...

தரம் 1 – 11 பாடசாலைக்குரிய
கணிப்பீட்டறிக்கைகள்,
தரம் 1 – 5 அத்தியாவசியக்
கற்றல் தேர்ச்சிகள் உடன்
பெற்றுக்கொள்ளலாம்.

**தயா அச்சகம்**

92(150), நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
077 396 5214

(4117)



## விசேட சலுகைகள்

வெளிநாடுகளுக்கான 11Kg ற்கு மேற்பட்ட
பொதிகளுக்கான 1Kg க்கான கட்டணம்

UK - 1380/= Australia - 2130/=
France - 1930/= Germany - 1880/=

மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் பொதிகள் சேவை
321,K.K.S Road, Jaffna
077 755 4528

கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார்,
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி

(1105)


# 20 ஆவது ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் தின கொண்டாட்டத்தில்

## ஜனாதிபதி அநுர இன்று பிரதான உரை

வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங் இன் அழைப்பின் பேரில் வியட்நாமிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இன்று செவ்வாய்க்கிழமை (06) ஹோ சி மின் நகரில் ஆரம்பமாகும் 20 ஆவது ஐக்கிய நாடுகளின் வெசாக் தின கொண்டாட்டங்களில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று பிரதான உரையை நிகழ்த்தவுள்ளார்.

இலங்கை நேரப்படி இன்று செவ்வாய்க்கிழமை (06) காலை 7.40 மணியளவில் ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபையின் 20 ஆவது வெசாக் தின நிகழ்வில் பிரதான உரையை நிகழ்த்தவுள்ளார்.

இந்த உரை உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் மாலை 5:00 மணிக்கு தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

"மனித கண்ணியத்திற்கான ஒத்துழைப்பு மற்றும் சகிப்புத்தன்மை: உலக அமைதி மற்றும் நிலையான வளர்ச்சிக்கான பௌத்த புரிதல்" என்ற தொனிப்பொருளில் இன்று செவ்வாய்க்கிழமை (06) ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகளின் வெசாக் கொண்டாட்டம் மே 08 வரை நடைபெறவுள்ளதோடு இலங்கை, இந்தியா, நேபாளம், லாவோஸ் மற்றும் கம்போடியா ஆகிய பௌத்த நாடுகளைச் சேர்ந்த உயர்மட்ட பிரதிநிதிகள் மற்றும் 85 பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 2,800 பேர் இதில் கலந்துகொள்ளவுள்ளார்கள். (ம-4,7)

# நெடுந்தீவில் வேட்பாளர் மீது தாக்குதல்

## யாழ். போதனாவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் மீது நெடுந்தீவில் வைத்து நேற்று திங்கட்கிழமை தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதேச சபை வேட்பாளரான முருகேசு அமிர்தமந்திரன் என்பவரே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கானவர், தலையில் காயமடைந்த நிலையில் நெடுந்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-4,7,33)

# மரண அறிவித்தல்

## திரு.சின்னத்துரை சண்முகலிங்கம்

(உரிமையாளர் சன்யோ கோப்பி & கூல்பார் – சுன்னாகம்
முன்னாள் உப அதிபர் யா/ சங்குவேலி அ.த.க. பாடசாலை)



தோற்றம் 1945.03.05 மறைவு 2025.05.04

வன்னியசிங்கம் வீதி, இணுவில் தெற்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சண்முகலிங்கம் அவர்கள் 2025 வைகாசி 04 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரது ஈமைக்கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறியத் தரப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு, இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(4115)

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 - 11 - 1935



மறைவு 05 - 05 - 2025

## வைத்திலிங்கம் விஜயரட்ணம்

வேம்பன் வீதி, உரும்பிராய் தெற்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் விஜயரட்ணம் அவர்கள் நேற்று (05.05.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பவளம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தவனம் - வெள்ளையம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரி (தேவி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் விஜயதேவி, விஜயராணி, பத்மராணி, விஜயமலர், பாலசுப்பிரமணியம், ஜெயகுமார், ஜெயந்தி, சுகந்தி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், மகேசன், குணநாயகம், தம்பிப்பிள்ளை மற்றும் புலேந்திரன், இந்திராதேவி, அமுதா, லோகராஜா, குலசிறி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற தாரணி அவர்களின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (06.05.2025) செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்பன் வீதி (ஒஸ்கா லேன்),
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்

தகவல்:
குடும்பத்தினர்

(4116)


# அறிவித்தல்

076 XXX X523

மேற்படி தொடர்பு இலக்கம்
எமது சேவையில்
இருந்து நிறுத்தப்பட்டுள்ளது.

சமூக ஆர்வலர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள்,
கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள்,
மற்றும் பொதுமக்கள் மேற்படி தொடர்பிலக்கத்துடன்
தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்

ஈ – சன்ஸ்

148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2695 / 077 429 0613

(C-2903)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி பிரதீபன் நித்தியா

(அபிவிருத்தி உத்தியோகத்தர்)

திதி : 06.05.2025 சித்திரை மாத பூர்வபக்க தசமி

ஆண்டு ஒன்று கடந்ததுவோ
அன்பு முகம் நீங்கிச் சென்று
ஆனாலும் எம் மனமோ
இன்னும் ஆறவில்லை
காலங்கள் பல கடந்தாலும்
நீங்கள் என்றும் எம் மனதில்
காவியமாய் இருப்பீர்கள்

(1104)

தோற்றம் 1986.04.26 மறைவு 2024.04.17

மாதகல்,
சகாயபுரம்.

தகவல்:
கணவன்,
பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.